பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 15 வெள்ளிக்கிழமை (27.02.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:093

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

## 'உதயன்' ஆசிரியர் வித்தியாதரன் கைது!
## கடத்தல் பாணியில் கைவரிசை; பின்னர் கைது என அறிவிப்பு

கொழும்பு, பெப்.27

'உதயன்' பத்திரிகையின் ஆசிரியரும் 'சுடர் ஒளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான நடேசபிள்ளை வித்தியாதரன் நேற்றுக் காலை வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் வலுக்கட்டாயமாக - கடத்தல் பாணியில் - கூட்டிச்செல்லப்பட்டார்.



கொழும்பு கல்கிஸைப் பகுதியில் தமது உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் அவர் கலந்து கொண்டிருந்தவேளை, வெள்ளை வான் ஒன்றில் பொலிஸ் சீருடையிலும், சிவில் உடையிலும் ஆயுதங்களுடன் வந்த ஏழுபேர் கொண்ட குழு ஒன்றே அவரை வலுக்கட்டாயமாக வானில் ஏற்றிச் சென்றது.

பொலிஸ் சீருடையில் இருந்த மூவர், முதலில் வானிலிருந்து ஆயுதங்களுடன் இறங்கிவந்து வித்தியாதரனை வலுக்கட்டாயமாக கையில் பிடித்து இழுத்துச் செல்ல முயன்றனர். எனினும் அங்கு நின்ற 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

''எங்கே கொண்டுசெல்கிறீர்கள்?'' என்று அவர் பொலிஸாரிடம் கேட்டார். அதற்கு பொலிஸார் ''பொலிஸ் நிலையத்திற்கு'' என்று கூறிவிட்டு மீண்டும் வித்தியாதரனை இழுத்தனர்.

அந்தவேளையில் குறித்த வெள்ளை வானில் இருந்து இறங்கிய, சிவில் உடை தரித்த நால்வர் உரத்துச் சத்தமிட்டு அங்கிருந்தோரை பயமுறுத்தியவாறு, அவ்விடத்துக்கு வந்து வித்தியாதரனை தரதரவென இழுத்துச் சென்று வானில் தூக்கிப் போட்டனர். அவர்களின் பலாத்காரத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து குறுக்கே (16 ஆம் பக்கம் பார்க்க)

### வித்தியாதரனின் பாதுகாப்பை உறுதிசெய்ய பத்திரிகையாளர் சம்மேளனம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 27

'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் ந. வித்தியாதரன் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்பதை உடனடியாக வெளியிடுமாறு இலங்கை அரசிடம் கேட்டுக்கொண்டுள்ள சர்வதேச பத்திரிகை யாளர் சம்மேளனம் அவரது பாதுகாப்புக்குறித்துக் கடும் அச்சம் (16 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆயுதங்களை களையும் வரை
# படையினரின் நடவடிக்கை தொடரும்!

## எக்காரணம் கொண்டும் யுத்த நிறுத்தம் இல்லை என்கிறார் கோத்தபாய


கொழும்பு, பெப்ரவரி 27

பயங்கரவாதத்தினை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் வரை, வடக்கில் படை நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது.

எக் காரணம் கொண்டும் எந்த வித யுத்த நிறுத்தத்தையும் அரசு பிரகடனப் படுத்தப் போவதில்லை. இதில் நாம் உறுதியாகவே உள்ளோம்.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயளாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கும் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பயங்கரவாதத்தினை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் வரையில் வடக்கில் படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமானப்போர் (16 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்புலிகளின் முகாம் இராணுவம் வசமானது

கொழும்பு,பெப்.27

முல்லைத்தீவின் மேற்குப்பகுதியில் அமைந்திருந்த கடற்புலிகளின் முகாம் ஒன்றை இராணுவத்தினர் நேற்றுக் கைப்பற்றியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் 58வது படையணி மேற்கொண்ட நடவடிக்கையின் போது இம் (16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்களின் ஐந்தாவது தொகுதியினரின்விவரம் 7 ஆம் பக்கத்தில்.

## இலங்கை விவகாரம் குறித்து ஐ.நாவில் பாதுகாப்புச் சபை செய்தியாளர் மாநாடு இன்று

நியூயோர்க், பெப்.27

இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் செய்தியாளர் மாநாடு இன்று (பெப்.27 இல்) இடம்பெறவுள்ளது என 'இன்னர் சிற்றி பிரஸ்' செய்தியாளர் மத்தியூஸ் ரஸல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## உண்மைகளை அடக்கும் நோக்குடனேயே என்மீது விசாரணைகள் நடத்தப்பட்டன

### ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்

கொழும்பு, பெப்.27



நாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு குறித்து அரச ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டமை குற்றப்புலனாய்வுத் துறை அதிகாகள் என்னை விமர்சித்தமை ஆகியன உண்மைகளை அடக்கும் நோக்கத்துடன் செயற்பட்டவை என்றே நான் கருதுகின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது: (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லை; புதுமாத்தளனில் மக்கள் பேரவலம்

### செஞ்சிலுவைக்குழு அறிக்கை

கொழும்பு, பெப். 27

வன்னியில் மக்கள் அதிகளவில் தங்கியுள்ள புதுமாத்தளன் பகுதியில் குடிதண்ணீருக்குக்கூடப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அங்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளது என்று எச்சரித்துள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழு அப்பகுதியும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் பாதுகாப்பற்றவையாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

மக்கள் உணவு,குடிதண்ணீர், பாதுகாப்புக் காரணங்களுக்காக கரையோரப் பகுதிகளை நோக்கித் தொடர்ந்து இடம்பெயர்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ள செஞ்சிலுவைக்குழு, அங்குள்ள நிலைமை குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:

வன்னியில் தற்போது ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பு, உணவு, குடிதண்ணீர் போன்றவற்றைத் தேடியும் யுத்தத்திலிருந்து தப்புவதற்காகவும் கரையோரப் பகுதிகளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் குறித்த அக்கறை இலங்கை அரசுக்கு மிகக்குறைவு

### அமெரிக்க வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 27

இலங்கையில் ஆயுத மோதல் தீவிரமடைந்துள்ளதையடுத்து மனித உரிமைகள் குறித்த அரசின் அக்கறை குறைவடைந்துள்ளது என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் வருடாந்த மனித உரிமை நிலைவரம் குறித்த அறிக்கையிலேயே இலங்கை குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கின் பெரும் மோதல் துடுப்பாட்டம்
## முதல் நாளில் இரு அணிகளின் இன்னிங்ஸ்களும் முடிந்தன

யாழ்ப்பாணம், பெப். 27

வடக்கின் பெரும் மோதல் என்று வர்ணிக்கப்படும் சென்றல், சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான பெருந் துடுப்பாட்டப் போட்டியின் நேற்றைய முதல்நாள் ஆட்டத்தில் இரண்டு கல்லூரி அணிகளுமே தமது முதல் இன்னிங்ஸை விளையாடி முடித்தன.

ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் சென்ரல் அணி முன்னிலை வகிக்கிறது.

நேற்றையதினம் பூவா தலையா போட்டதில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்று களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினர் மிகவும் விரைவான முறையில் ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 52.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

செல்ரன் பத்து நான்குகள் ஒரு ஆறு அடங்கலாக 78 ஓட்டங்களை 76 பந்துகளிலும் ரதீசன் 34 பந்துகளில் ஏழு நான்குகளுடன் 42 ஓட்டங்களையும் ஸ்ரீபன்ராஜ் 29, சிவகரன் 21, ஜெரிக்துஷாந் 18, எட்வேட்வெ..ன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பிரியதர்சன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கஜீபன் 11 ஓவர்கள் பந்து வீசி 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நவநீதன், ஹரிபிரவின், ஹரிவதனன், எவோன்சன் முறையே 34, 30, 26, 26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி மத்திய கல்லூரி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது 34.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து104 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கஜீபன் 21, கஜரூபன் 18, பிரணவன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய அலென்குமார் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கோபிகன் 10.4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரதீசன் 5ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் தனுஜன், ஸ்ரீபன்ராஜ் முறையே 13, 6 ஓட்டங்களைக்கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் நேற்றையதினம் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 4 ஓவர்கள் பந்து வீசப்பட்ட நிலையில் ஒரு விக்கெட்டை இழந்து 13 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஸ்ரீபன்ராஜ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துள்ள போதிலும் எறிக்துஷாந் 6 ஓட்டத்துடனும் எட்வேட் எடின் ஓட்டம் எதுவுமின்றி ஆட்டமிழக்காமல் உள்ளார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஹரிபிரவீன் ஒரு ஓவர் பந்து வீசி ஒரு ஓட்டத்தைக் கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்டம் மீண்டும் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (2-86)



கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனின் 'நாற்றுமேடை' நூல் அறிமுகவிழா மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் எஸ். கனகசபாபதி மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் நூலாசிரியர் க.ஸ்ரீகணேசன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன், கலாநிதி க.குணராசா ஆகியோர் காணப்படுகின்றனர்.

நூலாசிரியர் அறிமுக உரையாற்றிய எழுத்தாளர் ஐ.சாந்தன், நூல் அறிமுக உரையாற்றிய பலாலி ஆசிரியர் கலாசாலை இளைப்பாறிய அதிபர் சோ.பத்மநாதன் ஆகியோரை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

## கபடி, எல்லே போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன

வலி,வடக்கு, பெப்.27

உடுவில் பிரதேசசெயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவிருந்த ஆண்களுக்கான கபடிப்போட்டி, ஆண்கள், பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டு அலுவலர் செல்வி எஸ்.மனோன்மணி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த ஆண்களுக்கான கபடிப்போட்டி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-86)

# இனிவரும் தேர்தல்களில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை

## நிச்சயம் கிடைக்கும் என்கின்றார் பீரிஸ்

கொழும்பு, பெப். 27

இனிவரும் தேர்தல்களில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு தேர்தல் களத்தில் பலமான நிலையில் உள்ளது. இதுவரை நடந்து முடிந்த தேர்தல் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும் போது எதிர்வரும் தேர்தல்களில் அரசால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் தொகுதிவாரி தேர்தல் முறைமை மூலம் அவருக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை கிடைத்தது. இப்போதைய விகிதாசார தேர்தல் முறைமையின் ஊடாக எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் நாம் நிச்சயம் இந்தப் பெறுபேற்றைப் பெறுவோம். விகிதாசார முறைமை இப்போது மக்களால் வெறுக்கப்படுகின்றது.

இந்த முறைமையை மாற்றுவதற்காக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அனைவரினதும் இணக்கப்பாடுகள் கிடைக்காமையால் இது தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுக்கமுடியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் இந்தத் தேர்தல் முறைமையை மாற்றமுடியும்.

இதேவேளை, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே இன்று மஹிந்த ராஜபக்ஷவால் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முடிந்தது - என்றார்.

# இளம் குடும்பஸ்தர்கள் இருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் 48 மணித்தியாலங்களுக்குள் இரு இளம் குடும்பஸ்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள மண்டூர் தம்பலவத்தையில் பரசுராமன் டேவிட் (வயது 30) என்பவர் அவரது வீட்டிற்கு வந்த ஆயுததாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதேவேளை, பாவற்கொடிச்சேனை வாசியான கார்த்திகேசு மயில்வாகனம் (வயது 33) என்ற விவசாயியும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் இவரைக் கடத்திச் சென்ற போது அவர்களிடமிருந்து தப்பியோட முயன்ற வேளை இவர் சுடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# தபால் மூல வாக்களிப்பு நேற்று நண்பகலுடன் முடிவு

கொழும்பு, பெப். 27

மேல்மாகாணசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் நேற்றுடன் முடிவடைந்துள்ளது எனத் தேர்தல்கள் ஆணையாளர் [illegible]ரிவித்தார்.

மேல்மாகாணசபைத் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்க கடந்த 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தபால் மூலம் வாக்களிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதில் இருந்த தாமதத்தை அடுத்து கால எல்லை நேற்று மதியம் 12 மணி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

எனினும் எக்காரணத்துக்காகவும் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி இனி நீடிக்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (அ-சி)

# மனித உரிமைகள் குறித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைகள், காணாமற்போதல்கள் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்களில் இலங்கையில் தமிழ் இளைஞர்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளும் பல்வேறு மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளனர் எனக் கடுமையாகச் சாடியுள்ள அமெரிக்க வெளி விவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆயுத மோதல் தீவிரமடைந்துள்ளதை அடுத்து இலங்கையில் மனித உரிமைகள் குறித்த அரசின் மதிப்பு குறைவடைந்துள்ளது.

படுகொலைகள், காணாமற் போதல் போன்ற மனித உரிமை மீறல்களால் அதிகளவு பலியாகின்றவர்கள் இளம் தமிழ் ஆண்களே.

இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படும் கொலைகள், அரசியல் நோக்கம் கொண்ட கொலைகள் என்பனவும் அரசுடன் தொடர்புடைய ஆயுதக்குழுக்கள், சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல், காணாமற்போதல், சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல் போன்ற பிரச்சினைகளும் இருக்கின்றன.

அரச சார்பு ஆயுதக்குழுக்கள் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள், சித்திரவதை, மிரட்டிப் பணம் பறித்தல் போன்றவற்றில் சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்கப்பட்ட நிலையில் ஈடுபட்டுள்ளன.

கடந்த வருடம் இராணுவ, பொலிஸ் அல்லது துணை இராணுவக்குழுவைச் சேர்ந்த எவரும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளுக்காகத் தண்டிக்கப்படவில்லை.

அரசமைப்புச் சபையை நியமிப்பதற்கு ஜனாதிபதி தவறி[illegible] ஆணைக்குழுக்களை [illegible]

அரசும் அதன் முகவர்களும் கண்மூடித்தனமான சட்டவிரோதப் படுகொலைகளில் ஈடுபடுகின்றனர் என கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

**புள்ளி விவரங்களை வெளியிட ஆணைக்குழு மறுக்கிறது**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் பொதுமக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இடம்பெற்ற ஆட்லறித் தாக்குதலில் பலர் பலியாகியுள்ளனர்.

அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்குத் துணை ஆயுதக்குழுக்களைப் பயன்படுத்துகின்றது. இக்குழுவினருடன் தொடர்புடையவர்கள் பல படுகொலைகளில் ஈடுபட்டுள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசா[illegible] முன்னேற்றம் ஏற்படவில்லை. [illegible] காரணமாக அரச படைகள் மற்றும் துணை இராணுவக் குழுவினரால் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்த புள்ளிவிவரங்களை வெளியிட இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மறுத்துள்ளது.

கடந்த வருடம் 500 க்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர்.

சாட்சிகளும், பாதிக்கப்பட்டவர்களும் தமிழ் பேசும் ஆயுததாரிகள் இலக்கத்தகடற்ற வெள்ளை வாகனத்தில் வருவோரால் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கின்றன.

எனினும் அரசு பொதுவாக இக்குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யவில்லை. கடந்த வருடம் பல ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்துவைக்கப்பட்டனர். எனினும் பலர் 24 மணி நேரத்திற்குள் விடுவிக்கப்பட்டனர் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வன்னி மக்களுக்கு மனிதநேயம் கிட்டுமா?

இலங்கை அரசாங்கம் அந்த நாட்டின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தனக்குள்ள ஆர்வத்தை வெளியிடவில்லை-என்று அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவில் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டிருக்கிறது. கவலையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை குறித்து விசாரணைகளை மேற்கொண்ட குழுவின் தலைவரும் ஜனநாயகக் கட்சியை - ஆளும் கட்சியை - சேர்ந்தவருமான செனட்டர் பொப் கசே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்ததாகச் செய்திகள் வெளிவந் துள்ளன.

இலங்கையில் அரசியல் உடன்பாடு ஒன்று ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை. அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் போலத் தென்படவில்லை. அதே வேளை, விடுதலைப் புலிகளுக்கு மாற்றீடான சக்திகளைக் கண்டுபிடிப்பதற்கும் ஆர்வம் காட்டவில்லை; தமிழ் மக்களுக்கு நம்பகத் தன்மை மிகுந்த மாற்றீடு ஒன்று முன்னை வக்கப்படவும் இல்லை- என்றவாறு செனட்டர் பொப் கசே கூறியுள்ளார்.

அவரது இந்தக் கருத்துக்கள் பூடகமாகவும், உள்ளார்ந்தம் பொதிந்ததாகவும் இருப்பதை அவதானிக்கலாம். அவரது கருத்திலிருந்து முக்கிய அம்சங்கள்- கவனத்தில் எடுக்க வேண்டிய இரண்டு அம்சங்கள்- வெளிப்பட்டுள்ளன.

ஒன்று: இலங்கையின் இப்போதைய பிணக்கில் அரசாங்கம் தான் நினைத்ததையே செய்யப்போகிறது. எந்த வெளிநாட்டினதும் ஆலோசனையையோ அன்றி அழுத்தத்தையோ பொருட்படுத்தமாட்டாது. தான் வகுத்து வைத்திருக்கும் அரசியல் அட்டவணைப் பிரகாரமும் அதனை அடியொற்றிய இராணுவ அட்டவணைப் பிரகாரமுமே, நாட்டுப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு முடிவு செய்துள்ளது. இது விடயத்தில் எவராலும் - அமெரிக்கா போன்ற பலம் மிகுந்த நாட்டாலும் கூட - தனது அட்டவணையில் திருத்தமோ அன்றி மாற்றமோ செய்ய இடம்கொடுக் கமாட்டாது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

இரண்டு: இலங்கை தனக்கென இறையாண்மை கொண்டிருக்கும் நாடு என்பதனால் அதனைத் தட்டிக் கேட்கும் நிலையில் அமெரிக்காகூட இல்லை. ஆகவே சர்வதேசங்கள் வன்னியில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தவோ, அங்கு தமிழ்ப் பொதுமக்களுக்கு உண் டாகும் அழிவுகளையும் அவலங்களையும் நிறுத்தவோ வலிமை உள்ளனவா என்ற கேள்வியே மேலெழுந்து நிற்கிறது.

புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கியோ அல்லது சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடி பணிந்தோ அரசு ஒருபோதும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்குச் செல்ல மாட்டாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இடித்துக் கூறியதை - சூளுரைத்தமையை ஒருவகையில் மெய்ப்பிப்பதாக அமெரிக்க ஆளுங்கட்சி செனட்டர் பொப் கசேயின் கூற்று - கவலை - ஒப்புவிக்கிறது எனக் கொள்ளலாம்.

இலங்கை நிலைவரத்தை இடர்கால அடிப்படையில் அணுகவேண்டும். தனது பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு என்று கொழும்பில் முன்னர் அமெரிக்கத் தூதுவராகப் பணிபுரிந்த ஜெவ்ரி லன்செட் கூறியிருப்பது இந்நாட்டு அரசாங்கத்தின் காதில் விழுமா என்பதும் சந்தேகத்துக்கு உரியதே.

இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள், சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் அமைந்து விடக்கூடாது என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லி பான்ட் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கூறியிருப் பதும் இந்தத் தருணத்தில் கவனத்தை ஈர்க்கிறது.

ஸ்ரீலங்காவின் மனிதாபிமான விவகாரங்களுக்கென பிரிட்டிஷ் பிரதமர் நியமித்த சிறப்புப் பிரதிநிதியையே நிராகரித்துவிட்டது இலங்கை அரசாங்கம். அவ்வாறிருக்கையில் அந்த நாடோ அல்லது அந்த நாட்டின் அமைச்சரோ சுட்டிக்காட்டும் கருத்தை கொழும்பு அரசு காதில் போடுமா?

வன்னியில் - முல்லைத்தீவில் - நாளாந்தம் தமிழ்மக்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்துகொண்டிருக்கிறார்கள். பெரும் சுகாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்கள். மோதல் நடைபெறும் பகுதிகளில் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. இவை குறித்து உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கிறது.

இந்தப் பெரும் மனிதாபிமான அவலத்தையாவது அரசு கண்கொண்டு பார்க்குமா, அதனைத் தீர்ப்பதில் நாட்டம் கொள்ளுமா என்பதும் கேள்விக்குரியதே.

நாளாந்தம் நடைபெறும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களால் அவதியுறும் மக்களின் நிலை நினைத்துப் பார்க்கவே பயங்கரமானது, பரிதாபகரமானது என்று செய்தி ஏஜன்சிகள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

ஷெல்கள் விழும் பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் ஒரேயொரு தறப்பாள் கூடாரத்தில் கடற்கரையிலோ அல்லது நெல் வயலிலோ தங்குகிறார்கள். அதனால் சுகாதாரக் கேடுகள் தொற்றுநோய்கள் ஏற்படும் போராபத்து உருவாகவுள்ளதாகவும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேனும் மனிதநேயம் பேணுமாறு இலங்கை அரசுக்கு வெளிநாடுகளாலும், சர்வதேச நிறுவனங்களாலும் இடித்துக்கூறுவதற்கு இயலாது என்ற நிலைமையே உருவாகியிருக்கிறது!

மனிதனின் ஆகக்கூடிய உச்ச மதிப்புள்ளது அவனின் உயிரே. அதனைப் பேணுவதற்கு அத்தியாவசிய வைத்திய, சுகாதாரத் தேவைகளைச் செய்வதில் நாட்டம் காட்டாமல் அரசு மேற்கொண்டிருக்கும் வன்னி மீதான 'மனிதாபிமான நடவடிக்கை' எந்தவகையில் அர்த்த முடையது....?

# யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு பயனுள்ளதாக இலத்திரனியல் ஊடகக்கற்கைநெறி அமையும்

## சர்வதேச ஊடக வல்லுநர் ஹென்றிக் தெரிவிப்பு

அச்சு ஊடகங்கள் மட்டுமே கருத்து வெளிப்பாட்டு சாதனங்கள் என்றதொரு கருத்து இங்குள்ளது. எனினும் இலத்திரனியல் ஊடகங்களும் தொடர்பாடல் துறையில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனவே குடாநாட்டு மாணவர்களுக்கு இலத்திரனியல் ஊடகக் கற்கை நெறி பயனுள்ள விடயமாக அமையும்.

இவ்வாறு சர்வதேச ஊடக வல்லுநரும், யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் ஆலோசகருமான கலாநிதி ஹென்றிக் குறூநெற் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்ற இலத்திரனியல் ஊடகப் பிரிவின் திறப்பு விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இவ்விழாவில் விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவிக்கையில்-

எம்மிடையே அச்சு ஊடகங்களை விடவும் இலத்திரனியல் ஊடகங்களே அதிக மதிப்பு வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. எமது நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் கூட இலத்திரனியல் ஊடகநெறியையே பயில்வதற்கு அதிகம் விரும்புகிறார்கள். இன்றுள்ள சூழ் நிலையின் அழுத்தம் அனைவருக்குமே தெரியும். எனவே அவற்றைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப இலத்திரனியல் ஊடக சாதனங்களைப் பயன்படுத்தவேண்டும் -என்று தெரிவித்தார்.

ஊடக வளங்கள் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடகக் கற்கை மாணவர்கள், சமூகப் பெரியோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4)




ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் இலத்திரனியல் ஊடகப் பிரிவை சர்வதேச ஊடக வல்லுனரும், ஊடக வளங்கள் பயிற்சி நிலைய ஆலோசகருமான கலாநிதி ஹென்றிக் குறூநெற், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசியர் பொ.பாலசுந்தரப்பிள்ளை ஆகியோர் இணைந்து திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## ஐ.நா. உணவு நிறுவனப் பிரதிநிதி விவசாயச் செயற்பாடு குறித்து ஆராய்வு

வண்ணை, பெப்.27

ஐ.நா.உணவு, விவசாய நிறுவனத்தின் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பற்றிக்ரீ இவான் நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்.வருகை தந்திருந்தார்.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனமும், உணவு விவசாய நிறுவனமும் இணைந்து செயற்படுத்திய விவசாய செயற்திட்டங்கள் சம்பந்தமான கள நிலைகளை பிரதிநிதி பார்வையிட் டார்.

அதேவேளை திருநெல்வேலி மத்தி விவசாயிகளுடனான சந்திப்பின் போது விவசாயிகள் தற்போது எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் மற்றும் எதிர்கால செயற்திட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந் நிகழ்வுகளில் விவசாய நிறுவன மாவட்ட அதிகாரி சிவானந்தன் கரித்தாஸ் - கியூடெக் திட்ட இணைப்பாளர் அனீதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (1-160)

## கலாசாரப் பேரவையின் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையினர் நாளை சனிக்கிழமை நடத்த விருந்த விசேட கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் கூட்டம் இடம்பெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்றும் யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## பொங்கல் உற்சவ கூட்டம் ஒத்திவைப்பு

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு எதிர்வரும் இரண்டாம் திகதி மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (1-207)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், பெப்.27

தரம் 5க் கான புலமைப்பரிசில் பரீட்சை இவ் வருடம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் அடுத்த வாரமளவில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை புலமைப்பரிசில் உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் மாணவர்களின் பெற்றோர்கள் வருடாந்த வருமானத் தொகை 54,000 ரூபாவிலும் (ஐம்பத்து நான்காயிரம் ரூபாவிலும்) குறைந்தாக இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உதவித் தொகையை பெற விரும்பும் மாணவர்களின் விண்ணப்பங்களுடன் பெற்றோர்களின் வருமான அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் பரீட்சை ஆணையாளரினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களது விண்ணப்பங்கள் [illegible]ப்பட்டிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-131)

### நாளை

| | |
|---|---|
| மாசி 16 | 28.02.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 7.27 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | மு.இ. 10.17 வரை |
| சுபநேரம்: | 03.26 - 04.56 |
| ராகுகாலம்: | 09.26 - 10.56 |

## ஆங்கில அரங்க கற்பித்தல் கருத்துரை பல்கலையில்

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் க. ஸ்ரீகணேசன் 'வகுப்பறை ஆங்கில கற்பித்தலில் அரங்கப் பயன்பாடு' என்னும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரை மண்டபம் - 3 இல் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா தலைமை யில்'இந்தக் கருத்துரை நிகழ்வு இடம் பெறும்.(202)

## சாவகச்சேரியில் இன்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.27

தமிழ்த் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிதி உதவியுடன் இயங்கும் சாவகச்சேரி கணணிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய கிராம அலுவலர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்வார்.

ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்புரை ஆற்றுவார்.

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், பெப்.27

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த ஏ,பி,சி தரங்களில் உள்ளவர்களை இதில் பங்குகொள்ளுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

'பயிர் செய்து தேசத்தை கட்டியெழுப்புவோம்' என்னும் தொனிப்பொருளில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் 2007 - 2010 கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் சேவைகள் அமைச்சினால் 2007 - 2008 பெரும் போகத்தில் அமுல் செய்யப்பட்ட 5 தலைப்புக்களின் கீழ் நடத்தப்பட்ட தேசிய வீட்டுத்தோட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியாளர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

பாடசாலைத் தோட்டப் போட்டியில் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி, அலுவலகத் தோட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், அலுவலரின் உத்தியோகபூர்வ வதிவிட அல்லது பிரத்தியேக வதிவிடங்களுக்கான போட்டியில் புங்குடுதீவைச் சேர்ந்த பூ.சிறிகாந்தனும் மாகாண ரீதியில் முதலாவதாக வெற்றி பெற்றுள்ளனர்.

தனியார் வீட்டுத் தோட்டப் போட்டியில் தாவளை இயற்றாலையைச் சேர்ந்த செல்வி ர.சுதர்சினி பாடசாலை மாணவர்களின் வீட்டுத் தோட்டப் போட்டியில் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய மாணவி செல்வி சோ.சுலோசனா ஆகியோர் மாகாண ரீதியில் 2 ஆவது இடத்தை பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம் தலைமையில் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பிரதிப் பணிப்பாளர் பி.இராமநாதன் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.குகதாசன் ஆகியோர் கொண்ட குழு வெற்றியாளர்களுக்கான மதிப்பீட்டைத் தெரிவு செய்திருந்தது.

மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ற வெற்றியாளர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (1-111)

### சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில்

## வீடமைப்பு கடன் பெற்றவர்கள் அதனை மீளச் செலுத்த வில்லை

நவாலி, பெப்.27

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த 84ம் ஆண்டு வீடமைப்பு அதிகார சபையிடம் வீடு கட்டுவதற்கு கடன் பெற்றுக்கொண்ட பலர் அதனை திருப்பி செலுத்தாததினால் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் நிலுவையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடன் பெற்றவர்களும் கடனுக்கு பிணையாக நின்றவர்களும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதால் இக் கடனை அவர்களிடம் அறவிடமுடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தற்போது கடன்கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு பிணை நிர்ப்பவர்களுக்கு பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (1-100)

## கல்வி டிப்ளோமா பரீட்சார்த்திகளுக்கு

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ள பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரிகள் தெரிவுப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் தோற்றவிரும்பும் வெளிமாவட்ட பரீட்சார்த்திகளை உடனடியாக இன்று யாழ்.வலயக்கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கற்கைநெறியை உள்வாரியாக பின்பற்றுவதற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களையே தொடர்புகொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-2)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.27

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ச.கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ.வரதராஜமூர்த்தி கலந்து கொள்வார். (1-131)

* * *

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியும், பாடசாலை பெயர் வளைவு திறப்பும் நாளை சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலையின் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் பிரதம விருந்தினராகவும், திருமதி பசுபதி பாக்கியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி இரத்தினபூபதி வல்லிபுரம் பரிசில்களை வழங்கவுள்ளார். (204)

* * *

புத்தூர் நவக்கிரி அ.மி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.சி.பகவத்சிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராஜா கலந்து கொள்வார். (1-7)

## அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் 01.03.2009 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ.கணேசராஜா
செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் ரமணி அவர்களின் அன்புத் தந்தை

### S.ஸ்ரீலப்பு

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1994 பெண் பரிசாரகர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை செல்வி கனகசபை புண்ணியவதி அவர்களின் அன்புச் சகோதரர்

### கனகசபை தவபாலன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(83111)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

கண் மகிழ 27 ★ 02 ★ 1940



கண் நெகிழ 23 ★ 02 ★ 2004

### அமரர் அரியகுட்டி நவரட்ணம்

(முன்னாள் ரெலிக்கொம் உத்தியோகத்தர்)

திதி: 27.02.2009

பாசமுள்ள அப்பாவாக
பரிவுள்ள மாமாவாக
எங்களுடன் கூடி வாழ்ந்தால்
எங்கள் உள்ளம் குளிரும் அப்பா
எங்கள் ஆசை அப்பாவே
அறிவுரைகளையும் அன்புகளையும்

அரவணைக்கும் அப்பாவே
அமைதியான சிந்தனையும்
பொங்கும் நினைவுகளுடன்
பூமியிலே நீர் வாழ்ந்தீர்
காலனவன் கண்ணுற்று
கணக்கையும் முடித்துவிட்டான்.

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

உங்கள்பிரிவில் வாடும்:
மனைவி, மகள், மருமகன்.

(83108)

## தவறிவிட்டது

இளவாலை மேற்கு, சென்யூட் இளவாலை என்னும் முகவரியைச் சேர்ந்த பத்திநாதர் ரூஜீபன் என்பவரது தே.அ.அ (911201747V) இளவாலைப் பகுதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியில் ஒப்படைத்துதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

நகுலேஸ்வரா வீதி, கீரிமலை என்னும் முகவரியுடைய பாலச்சந்திரன் அஜந்தி என்பவரது தே.அ.அ. (878191552 V) யும் சயந்தன் அனித்தா என்பவரது தே.அ.அ. (857695984 V) யும் (14.02.2009) அன்று கனகம்புளியடி சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: S.சங்கீதா C/O Mr. மனோகரன்
சரசாலை தெற்கு, கனகம்புளியடி.
தொ.பே.: 0771310807, 077 4332922

(83109)

## கண்டெடுக்கப்பட்டுள்ள பொருள் (மோதிரம்)

11.02.2009 புதன்கிழமை அன்று கஸ்தூரியார் வீதியில் வின்சர் தியேட்டர் சந்திக்கும் கன்னாதிட்டி சந்திக்கும் இடையில் ½ பவுண் மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரத்தினை காட்டி பெற்றுக்கொள்ளவும்.

[illegible]

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகத்திலிருந்து கோம்பயன்மணல் செல்லும் 33 கே.வி மின்மார்க்கத்தில் அவசர திருத்த வேலைகளைச் செய்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களிற்கு 28.02.2009 சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பி.ப. 1 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணப்பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மின் பொறியியலாளர்,
யாழ்.பிரதேசம் இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.




IDM e-KIDS

E-Mail: idmdigitalsolutionjaffna@yahoo.com

ICT SKILLS FOR THE INFORMATION AGE

From: Pre School To Level 10

ON COMPLETION OF LEVEL 10 YOU WILL GET AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE of

Diploma in ICT Skills From BTEC - Edexcel (UK)

THROUGH OUR Foundation Diplomas You can Proceed towards DEGREE STUDIES

To Be The Best Join The Very Best

You can directly come to the office and fixed the suitable time table (8.30a.m. - 4.30p.m.) including Saturday & Sunday



Curriculum Standards:-

- EDEXCEL - United Kingdom
- NEST - National Educational Technology Standards - United States of America
- EdTech - Enhancing Education Through Technology- United States of America

IDM Digital Solutions (Pvt) Ltd.
(Member of the IDM Group of Companies)
114, Navalar Road, Jaffna. Tel No: 021 2224142


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி (சின்னமணி)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி திவாகர மூர்த்தி பாக்கியலட்சுமி நேற்று (26.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அருள்நிதி வாசா',
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
சு.திவாகரமூர்த்தி (கணவர்),
பிள்ளைகள்.

### கறுப்பன் சோணைமுத்து (சோமு)



சாவகச்சேரி கச்சாய் வீதி, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த கறுப்பன் சோணைமுத்து நேற்று (26.02.2009) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் முருகதாஸ் (சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை) அருந்தவமலர், முரளி தாஸ் (விவசாய அமைச்சு, திருகோணமலை), சுபாஷினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), ஸ்ரீமுகுந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நல்லையா, கலாவதி, அபிராமி, ஸ்ரீமணிமாறன் ஆகியோரின் அன்பு மாமனும் சிந்துஜா - தர்சன், கிஷோத், கலிஸ்ரன், ரக்ஸிகா, கேதுசணன், மிதுஷணன், குஷாணி, சஞ்சய், யுகஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2009) சனிக்கிழமை நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி/557293)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்று நோயாளர்களுக்கு உதவி

வண்ணை,பெப்.27

யாழ்.போதனா வைத்தியசாலை புற்று நோய் பிரிவில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்ற 65 நோயாளர்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் போர்வை மற்றும் படுக்கை விரிப்புகளை வழங்கியுள்ளது.

கனடா, ஒண்டோரியா மாநில நோர்த்தியே நகரில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை பங்கின் இளையோர் அனுப்பி வைத்த நிதியில் இருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போர்வை மற்றும் படுக்கைவிரிப்புகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-160)

# யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி அகலமாக்கிப் புனரமைக்கப்படவுள்ளது

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.27

பருத்தித்துறை வீதியை அகலமாக்கிப் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

புத்தூரில் இருந்து வல்வை வரையான பிரதான வீதியே முதற்கட்டமாக அகலமாக்கப்படவுள்ளதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதி அகலமாக்கிப் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு அதற்கான ஒப்பந்தகாரரையும் சபை நியமித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வீதியின் இரு மருங்கும் பத்து அடி அகலமாக்கி, தார் ஊற்றிப் புனரமைக்கப்படவுள்ளது.

இதே வேளை, இந்த பருத்தித்துறை வீதியை அகலமாக்கிப் புனரமைப்புச் செய்வது குறித்து கடந்த காலத்தில் யாழ்.அரச அதிபர் தலைமையிலான கூட்டம் ஒன்றில் முடிவெடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவ்வீதி அகலமாக்கிப் புனரமைக்கப்பட்டால் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதோடு விபத்துக்கள் ஏற்படு வதையும் தவிர்க்க வாய்ப்பு உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (202-224)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் ஐந்து மாடிகள் கொண்ட கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஐந்து மாடிக்கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

7ஆம், 8ஆம், 9ஆம், 10 ஆம் இலக்க விடுதியைக் கொண்டு இயங்கிய இரண்டு மாடித் தளத்தின் மேல் மூன்று மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மூன்று மாடித் தளத்தையும் விரைவாக அமைப்பதற்கு வைத்தியசாலை துரித நடவடிக்கையை மேற்கொண்டுள் ளது.

கட்டடப் பணிகள் ஆரம்பமாகியதை அடுத்து இரண்டாவது மாடியில் செயற்பட்டு வந்த விடுதிகள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. (202-224)

## குருசுமதகு சேதம்

வண்ணை,பெப்.27

யாழ்.மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள குருசுமதகு சேதமடைந்து வருகிறது.

மதகின் ஒரு பகுதியில் பாரிய ஓட்டை ஏற்பட்டு நாளடைவில் சிறிது சிறிதாக உடைந்து வீழ்கின்றது.

பிரதான போக்குவரத்து வீதியான மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள இந்த மதகு முற்றாகச் சேதமடைந்தால் அதனால் வலி.மேற்கு,தெற்கு, வடக்குப் பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்படும். (202-160)

## உடுப்பிட்டி வயல்களில் காட்டுப் பன்றிகள்

யாழ்ப்பாணம்,பெப்.27

உடுப்பிட்டி வயல் பிரதேசங்களில் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பன்றிகள் கூடுதலாக இரவு நேரங்களிலேயே நடமாடுவதாவும் பகல் வேளைகளில் அடர்ந்த பற்றைகளில் மறைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காட்டுப் பன்றிகள் வயல்கள் மற்றும் தோட்ட நிலங்களில் உள்ள பயிர்களை நாசமாக்கிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-224)

## கருத்தரங்கும் பரிசோதனையும்

யாழ்ப்பாணம்,பெப்.27

சுகவாழ்வுக்கான பயணம் அமைப்பின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை இலவச சலரோக, இரத்த அழுத்தப் பரிசோதனையும், கருத்தரங்கும் திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள அமைப்பின் அலுவலகத்தில் நடைபெறும். (202)

# பஸ் - பொலிஸ்ஜீப் விபத்து

யாழ்ப்பாணம்,பெப்.27

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் பொலிஸாரின் ஜீப்பும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் நான்கு பொலிஸாரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் யூழ். இலுப்பையடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

நேற்றுக்காலை 7 மணியளவில் பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்.நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸும் இலுப்பையடிச் சந்தியிலிருந்து யாழ்.நகருக்குள் ஆரியகுளத்தை நோக்கிச் செல்லவெனத் திரும்பிய பொலிஸ் ஜீப்பும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



பஸ்ஸும் - ஜீப்பும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகி இலுப்பையடிச் சந்தியில் உள்ள கடையொன்றுடன் மோதுண்டு இருந்ததைக் காண முடிந்தது.

விபத்தின்போது பொலிஸாரின் ஜீப்பினதும் பஸ்ஸினதும் முகப்புப் பக்கம் பலத்த சேதத்துக்குள்ளாகின.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (202-9-111-224)

## மனைப்பொருளியல் பரிசில் நாள் நிகழ்வு

தொல்புரம்,பெப்.27

வலிகாமம் கல்வி வலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மனைப்பொருளியல் பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். கோட்ட, வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும், ஆசிரியர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்தி கேட்டுள்ளார். (202-119)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக அனைத்துவருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2007/2008ற்கான விரிவுரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

மாணவர்கள் அனைவரும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறும், புதிய கல்வியாண்டுக்கான தமது மீள் பதிவுகளை பீடாதிபதி அலுவலத்தில் மேற்கொள்ளுமாறு கலைப்பீடாதிபதி கேட்டுள்ளார். (202)

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேலும் ஒரு மாடி

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேலும் ஒரு மாடி அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மண்டபத்தின் திறந்த மேல் தளத்தை புனர்நிர்மாணம் செய்து ஆறாவது மாடியாக செயற்படுத்தப்படவுள்ளது.

கீழ்த் தளத்துடன் சேர்ந்து ஐந்து மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதியின் அதி உச்சத்தில் உள்ள திறந்த மேல் தளத்துக்குக் கூரை போட்டுப் புனரமைக்கப்பட் டுள்ளது.

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இந்த மேல்தள மாடியில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை நடத்துவதற்கும் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சிக் கல்லூரியின் செயற்பாட்டை அடுத்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சபையின் நிரந்தர கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி குருநகர் கடற்கரை வீதியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-224)

## கியூடெக் நிறுவனத்தால் சொட்டு நீர்ப்பாசன வசதிகள்

வண்ணை,பெப்.27

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் சுனாமி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மண்வளம் மற்றும் நீர்ப்பாசனம் இல்லாத பகுதிகளுக்கான சொட்டு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து பயனாளிகளுக்கு வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகிறன.

அந்த வகையில் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு விவசாயத் திணைக்கள அனுசரணையுடன் சொட்டு நீர்ப்பாசன உதவிகளை நிறுவனம் வழங்கியுள்ளது.

இதனூடாக வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தமக்குத் தேவையான உப உணவுப் பொருள்களை விளைவித்துக் கொள்ளப் பேருதவியாக அமையுமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-160)

# யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் விவரம் கணக்கெடுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்கள், வாடகை வீடுகள், பொது இடங்கள் போன்றவற்றில் வாழ்பவர்கள் பற்றிய கணக்கெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டின் கீழ் புள்ளி விவரத் திணைக்களத்தின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக பயிற்சி அளிக்கப்பட்ட தொண்டர்கள் மூலம் கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக இக் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட கணிப்பீட்டாளர்கள் இப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த வாரத்துடன் இக் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-160)






யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி தொடர்பாடல் மற்றும் ஊடக வளங்கள் கழகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் ஆலோசகரும் சர்வதேச ஊடக வல்லுநருமான கலாநிதி ஹென்றிக் குறூநெற் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் அருட்திரு ஞானபொன்ராஜ் அடிகளார், [illegible] நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வெள்ளி மலை' சஞ்சிகையின் வெளியீடும் கருத்தரங்கும் சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச வாசகர் வட்ட உப தலைவர் சு.தம்பித்துரை, வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலர் திருமதி ச.சொக்கலிங்கம், நூலகர் செளந்தரராஜன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.
சஞ்சிகையின் முதற்பிரதியை இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் வெளியிட்டு வைக்க அதனை நாகம்ஸ் பாட்டா உரிமையாளர் ந.அரசரத்தினம் பெற்றுக் கொள்வதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்திலும் காணலாம். (படங்கள்:லிங்கன்)

# பொருளாதாரப் பிரச்சினைகளை முறியடிக்க மக்களின் வங்கிச் சேமிப்பே அத்திபாரம்

## கிளை முகாமையாளர் அரசகுமார் கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.27

இன்றைய காலத்தில் பலதரப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். ஆனால் அவற்றைச் சிறப்பாக முறியடித்துவெற்றி கொள்கின்றனர். இதற்குக் காரணம் அவர்களது வங்கிச் சேமிப்பு என்னும் அத்திபாரமே.



இவ்வாறு இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளையின் முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் கருத்துத் தெரிவித்தார்.

சுன்னாகம் பொது நூலகத்தில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற 'வெள்ளி மலை' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில், 'வங்கியும், வங்கிப் பழக்க வழக்கமும்' என்னும் தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குப் பலவிதமான கடன்களைக் கொடுக்கின்றன.வாடிக்கையாளர்களிடம் நேர்மை என்னும் மூலதனம் மட்டும் இருந்தால், வாழ்க்கையில் கடன்களைக் கொண்டு உயர முடியும்.

மக்களின் பணமும் வங்கியின் மூளையும் என்ற அடிப்படையிலேயே வங்கிக் கருமங்கள் இடம்பெறுகின்றன. சிலர் வங்கியின் பணமும் எங்கள் மூளையும் எனச் செயற்பட முனைவதாலேயே வங்கிகள் செயலிழக்க வேண்டி ஏற்படுகின்றன.

வங்கிகள் வழமையாகத் தமது வைப்புக்களில் ஐந்து வீதத்தினைத்தான் கடனாகக் கருதுகின்றன. இதனை இழந்தாலும் மிகுதி 95 வீதம் மூலம் வங்கி தொடர்ந்தும் செயற்பட முடியும். ஆனால் அறவிட முடியாத கடன்கள் பலமடங்காக அதிகரிக்கும் போது வங்கிகள் நஷ்டமடைய வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

எனவே ஒரு வங்கியின் அறவிட முடியாக் கடனின் வீதத்தைக் கொண்டு வங்கி தொடர்ந்து இயங்குமா என்பதை அறிந்து கொள்ளலாம்-என்றார்.

வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் 'வெள்ளி மலை' சஞ்சிகையின் ஐந்தாவது இதழின் முதற்பிரதியை முகாமையாளர் எஸ்.பி. அரசகுமாரிடமிருந்து நாகம்ஸ் பாட்டா நிறுவன உரிமையாளர் ந. அரசரத்தினம் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் பொது நூலகத்தின் நூலகர் செளந்தரராஜனும் உரையாற்றினார். (202-204-55)

# இடம்பெயர்ந்தோருக்கு உதவ இந்து மக்களை இணையுமாறு இந்து மாமன்றம் அழைப்பு


யாழ்ப்பாணம்,பெப்.27

இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ளளோருக்கு உதவுவதில் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் சகல இந்து மக்களையும் வேண்டியுள்ளது.

இது தொடர்பாக மாமன்றம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவில் இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் இருப்போர்களுக்கு உதவிகளைச் செய்ய அகில இலங்கை இந்து மாமன்றம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மாமன்றம் அங்கம் வகிக்கும் மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு மூலம் வவுனியா முகாம்களில் இருக்கும் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு உள்ள உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவிற்கு நிவர்த்தி செய்ய மாமன்றம்நடவடிக்கை எடுக்கின்றது.

இந்த முயற்சிக்கு உதவுமாறு சகல இந்து மக்களையும் மாமன்றம் அன்பாக வேண்டுகின்றது. இந்த மனிதநேயப் பணிக்கு ஆதரவு தந்து நிதியுதவி செய்ய விரும்புவோர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இயங்கும் மாமன்றத்தின் தற்காலிக அலுவல கத்தில் நிதியுதவிகளைச் செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்-என்றுள்ளது. (202)




யாழ்ப்பாணம்,பெப்.27

கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ். எழிழரசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் முதன்மைவிருந்தினராகவும், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர். (204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் பி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு, கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.ரி.பத்மநாதன் கலந்து கொள்வார். (203-111)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.இந்துக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (203)




உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...

சந்தனாலேப்ப ஸ்கிரப் பவுடர்

காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மை யாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தை பெற்றுத் தரும்.

சந்தனாலேப்ப ஸ்கிரப் பவுடர்
Chandanalepa Scrub Powder

100% herbal

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## நன்றி செலுத்தும் ஆராதனை

மண்ணில் 10 . 05 . 1939



விண்ணில் 12 . 01 . 2009

**அமரர் அரியரட்ணம் பாலச்சந்திரன்**
(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

12.01.2009 அன்று கர்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னாரின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் ஆராதனை 27.02.2009 அன்று மாலை 4.30 மணிக்கு டச்வீதி, உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
டச்வீதி, உடுவில்.
தொ.பே: 060 221 7742

## தவறிவிட்டது

372, நாவற்குழி, கோவிலாக்கண்டி என்னும் முகவரியுடைய ஜெகநாதன் பேரானந்தம் என்பவரின் தே.அ.அட்டை (582952655V) 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு.திருமதி பேரானந்தம் (சங்கீத ஆசிரியை)
நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

## தவறிவிட்டது

குதனை ஒழுங்கை, நவாலி, வடக்கு என்னும் முகவரியுடைய கஜனி சோதிலிங்கம் என்பவரது தே.அ.அட்டை (845613150V) மற்றும் விசேட அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் அட்டகிரி முருகன் ஆலயத்துக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## For Sale Yamaha News Mate Motor bike

Japan made MP series Blue colour, modified carrier and basket for ladies. Mint condition & one owner. run only town limits. 396, Navalar road, (kayelayapillaiar kovilady) old Uthyan lane, Jaffna Inspect only saturday & Sundays 9 am to 11 am.

## திருமண சேவை

1978 சதயம் 65 பாவம் செவ்வாய் இல்லாத இஞ்சினியர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. மற்றும் எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. புகைப்படம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பதிவு இலவசம்.

தொ.பே: 021 4591417

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடம்
ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
இதழியல் டிப்ளோமா (முழு நேரம்) கற்கைநெறிக்கான
அனுமதிப் பரீட்சை-2009

அறிவித்தல்

28.02.2009 அன்று நடைபெறவிருந்த மேற்படி கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சை அன்றைய தினம் நடைபெறமாட்டாது. பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்
26.02.2009

## அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா
வளாக ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி
**கந்தையா ஸ்ரீகணேசன்**
அவர்கள் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில்
கலாநிதிப் பட்டம் பெற்றதையிட்டு அவரை
அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்.
அவர் சுதுமலை அம்பாள் ஆலய
**பொன்னுச்சாமிக் குருக்கள் தியாகராஜா ஐயர்**
அவர்களின் மாணவர்களில் ஒருவராவார். அவர்
மேன்மேலும் கல்விச் சிறப்புக்கள்
பெறவேண்டுமென சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்பாளை வேண்டுகின்றோம்.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி
கிரியாகலாப முக்தாமணி
**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்.**
பிரதம குரு. ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
சுதுமலை,மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு ஐந்தாம் கட்டமாக அழைத்துச்செல்லப்பட்ட காயமடைந்த மற்றும் நோயாளர் 386 பேரின் விவரம்

முல்லைத்தீவில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரால் கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ள வன்னிப் பொதுமக்களின் விவரங்கள் வருமாறு:

மரியலீ(வயது75)-முல்லைத்தீவு, கமலாம்பிகை(வயது 80)-முல்லைத்தீவு, தேவராசா(வயது44)-முல்லைத்தீவு, என்:ரூபா(வயது 33)-முல்லைத்தீவு, எ.கிறேஸ்னி(வயது 10 மாதம்)- முல்லைத்தீவு, மேகலா(வயது 8)- கிளிநொச்சி, ஜெயப்பிரியா(வயது 10), கிளிநொச்சி, சுமித்திராதேவி(வயது 42)-கிளிநொச்சி, கே.கணேஸ்(வயது 69)-முல்லைத்தீவு, ஜீ.குணமணி(வயது 65)-கிளிநொச்சி, இ.செபஸ்ரியன்(வயது 52)-ஒட்டி சுட்டான், எஸ்.எம்.செபஸ்ரியன்(வயது 53) -முல்லைத்தீவு, சரஸ்வதி(வயது 41)-யாழ்ப்பாணம், சதாலக்ஸ்மி(வயது 39)-முல்லைத்தீவு, ஜி.சந்திரகுமார் (வயது 9) -முல்லைத்தீவு, ராசுநாதன்(வயது 65)-வவுனியா, ஜி.சித்ராமணி (வயது59)-கிளிநொச்சி, கே.சின்னத்தம்பி(வயது 74) -யாழ்ப்பாணம், டி.சாலேட்(வயது 44) -பள்ளமடு, கலைச்செல்வி(வயது 32)-கிளிநொச்சி, எஸ்.லக்ஸிகன்(வயது 4), திவ்வியா (வயது 4)-கிளிநொச்சி,

எம்.ஜெயானந்தன்(38)-கிளிநொச்சி, என்.சண்முகநாதன்(வயது 44)-மல்லாவி, ஆர்.நடராஜ்(வயது64)-முள்ளியவளை, எம்.எஸ். ஆர்.சசிநந்தினி (வயது72)-முல்லைத்தீவு, முகார்ஜி(வயது67), இ.பாக்கியம்(வயது67)-வட்டக்கச்சி, ஞானப்பிரகாசம்(வயது75)-புதுக்குடியிருப்பு, செல்லம்மா(வயது 80)கிளிநொச்சி, எஸ்.மாணிக்கம் (வயது 60)-கிளிநொச்சி, கே.புஸ்பராணி(வயது 29)-முல்லைத்தீவு, எம்.பஞ்சலிங்கம்(வயது 57) - மன்னார், பிதாரணி(வயது12)-மன்னார்,ஜி.கிருஸ்ணா(வயது75)-கிளிநொச்சி, எஸ்.யசோதா(வயது42)-கிளிநொச்சி, ஆர்.கெளசலவான் (வயது35)- ஒட்டிசுட்டான்,எஸ். ரதிமலர்(வயது 67)-கிளிநொச்சி, ஈஸ்வரி(வயது 70)-கிளிநொச்சி,

கே.கடலாம்பிகை(வயது 63)- கிளிநொச்சி, பி.ஜீவன்(வயது 12)- முல்லைத்தீவு, சாரசதேவி (வயது47)- முல்லைத்தீவு, கே.இலட்சுமி (வயது68)- கிளிநொச்சி, தனவதி (வயது60) -முல்லைத்தீவு, வி.தர்மலிங்கம் (வயது17)- முல்லைத்தீவு, எம்.துசான்(வயது 14)-யாழ்ப்பாணம், எஸ்.புஸ்பகலா(வயது 29)-பூநகரி, தமிழரசன்(வயது 1)-பூநகரி, ஏ.சிவராஜசிங்கம் (வயது 65)-கிளிநொச்சி, எம்.நேசநாதன் (வயது39)- யாழ்ப்பாணம், துசாரா (வயது 14) - யாழ்ப்பாணம், பி.பத்மநாதன் (வயது 62)-கிளிநொச்சி, புகழரசன் (வயது1)- யாழ்ப்பாணம், டி.குமரதாசன் (வயது45)- கிளிநொச்சி, ஜி.வாசுகி (வயது 44)- யாழ்ப்பாணம், எஸ்.குணராசன்(வயது 42)-யாழ்ப்பாணம், சந்திரவதி (வயது 38)- கிளிநொச்சி, கீதப்பிரியா (வயது 4)-கிளிநொச்சி,

எஸ்.சிவகாந்தன்(வயது16)-கிளிநொச்சி, எஸ்.பார்வதி(வயது 60)-கிளிநொச்சி, கே.செல்லம்மா(வயது85)-யாழ்ப்பாணம், இ.அன்னமலர்(வயது64)-கிளிநொச்சி, வள்ளி(வயது 80)-மன்னார், என்.நளினி (வயது30)-முல்லைதீவு, என்.சந்திரா (வயது 60)-முல்லைத்தீவு, ஆர்.இராஜேஸ்வரி (வயது50)-பு துக்குடியிருப்பு, யதுசா(வயது1)-முல்லைத்தீவு, யதுசா (வயது3)-யாழ்ப்பாணம், வை. லோகேஸ்வரி (வயது31)- யாழ்ப்பாணம், எஸ்.நவரட்ணம்(வயது 52)வவுனியா, எம்.சுதன் (வயது 27)-வவுனியா, மங்களேஸ்வரி (வயது40)- கிளிநொச்சி, எஸ்.நகுலேஸ்வரி(வயது31)-கிளிநொச்சி, இரோஸ்னா (வயது 2)-முல்லைத்தீவு, எஸ்.நிரோசன் (வயது 6)-முல்லைத்தீவு, எம்.விமலதேவி(வயது 57)-வவுனியா, சின்னத்தம்பி (வயது 84)-முல்லைத்தீவு,

எ.புஸ்பவதி(வயது 74)-யாழ்ப்பாணம், கே.சோமசுந்தரம் (வயது 65)-முல்லைத்தீவு, நிம்ரோத் (வயது 8)-புதுக்குடியிருப்பு, திகரா(வயது 6)-புதுக்குடியிருப்பு, சாந்தகிரி(வயது 28)-புதுக்குடியிருப்பு, என்.யோகமலர்(வயது 60)-முல்லைத் தீவு, வி.பிள்ளை(வயது 62)-மருதங்கேணி, எம்.ஸ்ரீதரன்(வயது 41)-மருதங்கேணி, சீனகன் (வயது1)- மருதங்கேணி, அருள்கணசீலன் (வயது35) -முல்லைத்தீவு, சுசிதரன்(வயது 13)-முல்லைத்தீவு, இராஜேந்திரலிங்கம்(வயது 55)-கிளிநொச்சி, ரி.சரவணமுத்து(வயது 69)-மன்னார், எஸ்.மனோண்மணி(வயது 61)-மன்னார், பி.அருள்தாஸ்(வயது 13)- முல்லைத்தீவு, எம்.தங்கம்மா(வயது 17)-முல்லைத்தீவு, எம்.அழகம்மா(வயது 47)-முல்லைத்தீவு, எஸ்.மோடிசன்(வயது 10) -முல்லைத்தீவு, விதுசா(வயது 8), அருளானந்தன்(வயது 85)-முல்லைத்தீவு, வி.தனுசா(வயது2), வி.தர்ணலக்சுமி (வயது 65)- முல்லைத்தீவு, வாசுகி (வயது 44)-கிளிநொச்சி, ஏ.ராமசாமி(வயது 64)-கிளிநொச்சி, கே.பூஞ்சோலை (வயது 56)- முல்லைத்தீவு, புஸ்பராணி(வயது 57)- முல்லைத்தீவு, வை.அபினயா (வய்து 8)-கிளிநொச்சி, எம்.சாந்தகுமாரி(வயது 34)-கிளிநொச்சி, எம்.சந்தியா (வயது1) -கிளிநொச்சி, ஏ.மகேஸ்வரி(வயது 72) - முல்லைத்தீவு,

வை.யமுனாலினி(வயது 30)-கிளிநொச்சி, ஆர்.ராசம்மா(வயது 60)-யாழ்ப்பாணம், எஸ்.சரஸ்வதி(வயது 57)-முல்லைத்தீவு, ஆர்.கிருஷ்ணசாமி (வயது68)-முல்லைத்தீவு, ஜே.ஜேமிஸ் (வயது82)-கிளிநொச்சி, எஸ்.சுனித்தா(வயது 29)-கிளிநொச்சி, எஸ்.கோபிதா(வயது 10)-கிளிநொச்சி, எஸ்.மகாலட்சுமி(வயது 52)-யாழ்ப்பாணம், தாசன்(வயது 10)-மன்னார், ரேணுகா (வயது 42)-கிளிநொச்சி, மலர் (வயது2)- கிளிநொச்சி, கலாஜோதி (வயது 39)-மன்னார், அபிஷேக் (வயது1.5)- மன்னார், எஸ். அன்ரனிதாஸ் (வயது79) -யோகபுரம் மல்லாவி, சோதி(வயது 60) -மட்டுவில், மார்க்கண்டன் (வயது66) -முல்லைத்தீவு, வள்ளிப்பிள்ளை (வயது61)-பொக்கணை, கஜேந்தினி(வயது 21)-தர்மபுரம், ஜே.ராசமணி(வயது78)- திருநகர் கிளி நொச்சி, சுசித்திரா(வயது 26)-கோகபுரம், மல்லாவி, மலரினியன் (வயது1.5) -கோக புரம், மல்லாவி,

எ.தர்சினி(வயது 29)-முல்லைத்தீவு, எ.அன்ரன்(வயது2)-முல்லைத்தீவு, அருள்ஞானகுஞ்சி(வயது33)-முல்லைத்தீவு, அபினயா(வயது7)-முல்லைத்தீவு, அபிஷா(வயது 2)-முல்லைத்தீவு, அருண் (வயது8)-முல்லைத்தீவு, எமில்டா(வயது 7மாதம்)-முல்லைத்தீவு, வி.செல்வ நாயகம்(வயது29)-ஆனந்தகுளம், அடம்பன், எஸ்.செல்லன் கதிர்காமர்(வயது 49)-யோகபுரம்,கோசா(வயது 28)-முல்லைத்தீவு, கிருத்திகா(வயது 2)-முல்லைத்தீவு, சாரதாம்பி (வயது 67)-யாழ்ப்பாணம், எம்.ராசம்மா (வயது 80)-முல்லைத்தீவு, எஸ்.டிலுக்சன் (வயது 13)-மானிப்பாய், முத்தம்மா (வயது75)- முழங்காவில், மன்னார், செல்வநாயகி (வயது62)-யாழ்ப்பா ணம், பரதீசன்(வயது 25)-புதுக்குடியிருப்பு, செல்வரத் தினம் (வயது75)-யாழ்ப்பாணம், எஸ்.கமலாம்பிகை (வயது 65)-வட்டக்கச்சி, ஜே.மேரிஜோசப்பின் (வயது 73)-கிளிநொச்சி, தேவநாயகம்பிள்ளை (வயது74)- பொக்கணை,

தயத்திரியன்(வயது6), மல்லாவி, ஆச்சிமுத்து(வயது74)-மல்லாவி, செல்லம்மா (வயது 79)- தனியன்குளம், அகுஸ்ரின் (வயது 63)-கிளிநொச்சி, சோதிராசா (வயது 67)-அரியாலை, யாழ்ப்பாணம், தம் பிராசா(வயது76)-மல்லாவி, வில்லுதீபன்(வயது 74)-மன்னார், மயூரதி (வயது 28)-யாழ்ப்பாணம், நரசிங்கம்(வயது76)-வேலணை, கே.நந்தகுமார் (வயது 56)-வவுனிக்குளம், பி.லக்ஸ்மி (வயது 77)- கந்தாணை, கே.அருள்மணி (வயது 58)-புதுக்குடியிருப்பு, சுபாஜினி (வயது32)- மருதங்கேணி, மோகனதாஸ் (வயது 32)-கிளிநொச்சி, தேவராணி (வயது 51)-மருதங்கேணி, சுபத்திரா (வயது 6)-முல்லைத்தீவு, என்.நவமலலேஸ்வரி(வயது 38)-முல்லைத்தீவு, என்.அபிஷேக்(வயது 10)-முல் லைத்தீவு, எ.ராசேந்திரம் (வயது49)-கிளிநொச்சி, அமரவதி (வயது73)- கிளிநொச்சி, கெலன்மேரி(வயது 38)- இரணைப்பாலை, என்.கமலேஸ்வரி(வயது 59)-இரணைப்பாலை, கிருஷாந்தி(வயது 8)-ஆண்டான் குளம், ஜெளலக்ஸ்மி(வயது 30)-ஆண்டான்குளம், விதுஷன்(வயது 3)-ஆண்டான்குளம், விதுஷியா(வயது 1)-ஆண்டான்குளம், என்.நவமலேஸ்வரி (வயது 40)-கிளி நொச்சி,

எஸ்.பவிஸ்த்தா(வயது 2.5)- கிளிநொச்சி, கே.பிரசாந் (வயது2)- முல்லைத்தீவு, யசுசா(வயது 8மாதம்)- முல்லைத்தீவு, எஸ்.குணசீலன் (வயது29)-முல்லைத்தீவு, எஸ்.புவனேஸ்வரி (வயது 63)-விஸ்வமடு, இ.பாலாமணி (வயது66) -விஸ்வமடு, கே. சூரியகுமார்(வயது 40)-புதுக்குடியிருப்பு, காந்திகா(வயது 75) -யாழ்ப்பாணம், ரி.சந்திரலதா(வயது 90) -மாங்குளம், கி[illegible](வயது 10)-மாங்குளம், சிவக்கொழுந்து(வயது 84)-மாங்குளம், எஸ்.தர்மராஜா (வயது46) -மாங்குளம், சங்கவி (வயது 4)-மாங்குளம், பார்வதி(வயது 48)அக்கராயன்குளம், புஸ்பராணி (வயது 56)-புதுக்குடியிருப்பு, அன்ரன்ஜோசப் (வயது 55)-வவுனியா, ரி.சின்னத்தம்பி (வயது 81)-வட்டக்கட்சி, எஸ்.ஜனனி

(வயது 34)-முல்லைத்தீவு, றொசாறி (வயது 6)- முல்லைத்தீவு, சரோஜன் (வயது 4)-முல்லைத்தீவு, வினோஜா (வயது 28)- கிளிநொச்சி, வினோஜன் (வயது 3 மாதம்)- கிளிநொச்சி,

என்.தவமணி (வயது 47) - பொக்கணை, எஸ்.குலசிங்கம் (வயது 20), கே.ஜெகதீஸ் - யாழ்ப்பாணம், கே.இளந்திரையன் (வயது 46) - பளை, துஷியந்தன் (வயது 9) - முல்லைத்தீவு, சிவமலர் (வயது 63) - முல்லைத்தீவு, இராஜேஸ்வரன் (வயது 47) - முல்லைத்தீவு, ரி.சரஸ்வதி (வயது 63) - பருத்தித்துறை, கே.மணிமாலா (வயது 43) - முருகண்டி, அமிர்தராஜா (வயது 61) - முள்ளியவளை, கனகசபாபதி (வயது 67), ரி.இம்மனுவேல் (வயது 60), ஐ.திலகவதனம் (வயது 50) - விசுவமடு, ஜே.காந்தரூபி (வயது 35) - ஜெயபுரம், தனுசன் (வயது 7) - கிளிநொச்சி, தனுஷன் (வயது 9) - கிளிநொச்சி, கௌசிகன் (வயது 4) - கிளிநொச்சி, ஜெயகுமரன் (வயது 30) - கிளிநொச்சி, ரி.சாந்தன் (வயது 62) - முல்லைத்தீவு, எஸ்.மரியா (வயது 59) - முல்லைத்தீவு, எஸ்.தர்மலிங்கம் (வயது 77) - பளை,

காந்தரூபன் (வயது 19)- கிளிநொச்சி, எஸ்.கந்தசாமி (வயது 59) - கிளிநொச்சி, ஜி.திரேசா (வயது 49) - கிளிநொச்சி, எஸ். சந்திரதேவி (வயது 60) - முல்லைத்தீவு, பி.இந்திராதேவி (வயது 58) - முல்லைத்தீவு, ரி.மகேஸ்வரி (வயது 68) - கிளிநொச்சி, ஆர்.துஷி (வயது 13), என்.ஸ்ரீதரன் (வயது 53) - கிளிநொச்சி, பி.ரோஜிதா (வயது 8), கிளிநொச்சி, ஜெயசுதா (வயது 35) - கிளிநொச்சி, எஸ்.சின்னம்மா (வயது 68) - செல்வபுரம், கே.நாராயணசாமி (வயது 45) - முள்ளியவளை, என்.பகீரதன் (வயது 18) - முள்ளியவளை, ரி.துரைரதம் (வயது 71) -தெல்லிப்பழை, ரி.சீதா (வயது 66) - தெல்லிப்பழை, ஸ்ரீதர்சன் (வயது 53) - கிளிநொச்சி (உயிரிழப்பு), பி.கமல்மிபுனி (வயது 21) - தெல்லிப்பழை, கே.இந்துமதி (வயது 44) - குடியிருப்பு, பி.கணேசமூர்த்தி (வயது 46) - வவுனியா, ரி.யேசுகரன் (வயது 17) - கிளிநொச்சி, எம்.கறுப்பையா (வயது 58) - கிளிநொச்சி, வி.நல்லையா (வயது 85) - கிளிநொச்சி, எஸ். ஜெசிந்தவா (வயது 7) - கிளிநொச்சி, வி.கதிர்வேல் (வயது 70) - கிளிநொச்சி,

என்.ஸ்ரீவிக்னேஸ்வரன் (வயது 46) - யாழ்ப்பாணம், கே.மோகன் (வயது 42) - முல்லைத்தீவு, என்.சிவகுமார் (வயது 34) - கிளிநொச்சி, எம்.சசிகுமார் (வயது 15) - வவுனியா, என்.சந்திரா (வயது 33) - புளியங்குளம், என்.சயந்தினி (வயது 5) - புளியங்குளம், என்.ஜெயந்தினி (வயது 8) புளியங்குளம், பி.வேலாயுதம் (வயது 61) - காரைநகர், எஸ்.மரியன் சலாமி (வயது 80) - யாழ்ப்பாணம், கே.யோகேஸ்வரி (வயது 34 ) - கிளிநொச்சி, கோகிலவதனி (வயது 4) - கிளிநொச்சி, கே.நவரெத்தினராஜா (வயது 55) - முல்லைத்தீவு, வி.ஏ. கௌசல்யா (வயது 47) - முல்லைத்தீவு, ரி.சரஸ்வதி (வயது 63) - முல்லைத்தீவு, ஜீ.சரோஜாதேவி (வயது 36) - முல்லைத்தீவு, ஜீ.கர்சன் (வயது 4) - முல்லைத்தீவு, என்.கமலேஸ்வரன் (வயது 41) - முல்லைத்தீவு, என்.ஜெயக்குமார் (வயது 33) - கிளிநொச்சி, எஸ்.இந்துமதி (வயது 35) - கிளிநொச்சி, நிலர்ஷன் (வயது 8) - கிளிநொச்சி, எஸ்.துஷ்மின் (வயது 7) - கிளிநொச்சி, மோகனதாசன் (வயது 17) - கிளிநொச்சி, வி.சிவராசா (வயது 52) - முல்லைத்தீவு, வி.சார்லின் (வயது 39) - வவுனியா, சார்லஸ் மத்யூஸ் (வயது 63) - முல்லைத்தீவு, நாகரட்ணம் (வயது 55), கே.விவேகானந்தராஜா (வயது 66) - யாழ்ப்பாணம், பி.கெடிஸ்கரன் (வயது 43) - முல்லைத்தீவு, பி.யோகபாக்கியம் (வயது 56) - திருகோணமலை, மங்களாதேவி (வயது 60) - கிளிநொச்சி, எம்.மகேஸ்வரி (வயது 61) - முல்லைத்தீவு, புஸ்கி (வயது 6) - கிளிநொச்சி, ரஜனி (வயது 36) - கிளிநொச்சி,

அகஸ்ரின் (வயது 4) - கிளிநொச்சி, பி.சரஸ்வதி (வயது 53) - முல்லைத்தீவு, எஸ்.மைக்கேல் (வயது 72) - கிளிநொச்சி, ரி.ராஜ்குமார் (வயது 9) - கிளிநொச்சி, வி.புண்ணியமூர்த்தி (வயது 60) - புளியன்குளம், எஸ்.சீதானம் (வயது 54) - கிளிநொச்சி, [illegible]ணம் (வயது 55) - நல்லூர், கமலாவதி (வயது 42) - முல்லைத்தீவு, கணேசன் (வயது 65) - கிளிநொச்சி, பி.தேவசகாயம் (வயது 67) - மன்னார், டி.ரீற்றாம்மா (வயது 63) - மன்னார், கலியம்மா (வயது 80) - வவுனியா, எஸ்.சுப்பிரமணியம் (வயது 63) - வவுனியா, எஸ்.கமலாதேவி (வயது 71) - முல்லைத்தீவு, கே.பாலசுப்பிரமணியம் (வயது 63) - கிளிநொச்சி, ரி.புனிதவதி (வயது 56) - கிளிநொச்சி, வேவி தருன் (வயது 3) - முல்லைத்தீவு, ஜே.பத்மினி (வயது 39) - முல்லைத்தீவு, டனுசியா (வயது 1.5) - முல்லைத்தீவு, சபாரட்ணம் (வயது 62) - முல்லைத்தீவு, டி.பரமேஸ்வரி (வயது 60) - முல்லைத்தீவு, ஜீ.துஷந்தி (வயது 19) - முல்லைத்தீவு, எஸ்.நவமணி (வயது 47) - கிளிநொச்சி, எஸ்.திலகராஜா (வயது 72) - மன்னார், ரவீந்திரா (வயது 48) - மன்னார், பி.பாக்கியலட்சுமி (வயது 75) - கிளிநொச்சி, வை.உஷானந்தனி (வயது 35) - கிளிநொச்சி, பி.வரதராணி (வயது 50) - கிளிநொச்சி, பி.கணபதிப்பிள்ளை (வயது 64) - கிளிநொச்சி,

கெலன்ஜொய்சி (வயது 49) - மன்னார், ஞானப்பிரகாஷ் (வயது 69) - கிளிநொச்சி, கணபதிப்பிள்ளை (வயது 64) - முல்லைத்தீவு, எஸ்.மஞ்சுளன் (வயது 14), கே.சிவலிங்கம் (வயது 70) - முள்ளியவளை, எஸ். போய்க்கேணை (வயது 85) - கிளிநொச்சி, எம்.சிவகுடும்பு (வயது 77) - முல்லைத்தீவு, யூ.மகாமாந்தன் (வயது 43) - முல்லைத்தீவு, புவனேஸ்வரி (வயது 72) - யாழ்ப்பாணம், எஸ்.ராஜேஸ்வரி (வயது 72) , டி.மாலினி (வயது 26) - யாழ்ப்பாணம், ரி.சாந்தினி (வயது 40) - விடத்தற்பளை, கே.பொன்னம்பலம் (வயது 55) - கிளிநொச்சி, எ.நடராஜா (வயது 50) - கிளிநொச்சி, என்.யோகேஸ்வரன் (வயது 35) - கிளிநொச்சி, என்.நாகலிங்கம் (வயது 84) - கிளிநொச்சி,

பி.பிறான்சிஸ் (வயது 69) - முல்லைத்தீவு, பி.மதனராஜா (வயது 31) - கிளிநொச்சி, கே.விலாவதி (வயது 51) - கிளிநொச்சி, ஆர்.பி.ரங்கம் (வயது 47) - அளவெட்டி, கெனிகா (8மாதம் ) - முல்லைத்தீவு, மேனுகா (வயது 7) - முல்லைத்தீவு, ரி.கமலா (வயது 32) - முல்லைத்தீவு, சத்தியன்குமாரி (வயது 55) - கிளிநொச்சி, ஜேது அம்மா (வயது 80) - கிளிநொச்சி, குமரன், குமரன் (வயது 8) முல்லைத்தீவு, பிறிஸ்லியா (வயது 75) - மாதளன், ரி.நாகேஸ்வர (வயது 63) - முல்லைத்தீவு, றொபேட் (வயது 12) - முல்லைத்தீவு, ஆர்.விவேகானந்தராஜா (வயது 46) - வவுனியா, எம்.தர்சனி (வயது 7) - கிளிநொச்சி, பரம்சோதி (வயது 43) - கிளிநொச்சி, எஸ். பத்திமா (வயது 61) - உடையார் கட்டு, ஆர்.லட்சுமி (வயது 68) - கிளிநொச்சி, ஜி.கணேஸ் (வயது 70) - கிளிநொச்சி, எஸ்.தவம் (வயது 32) - வல்லவராயன் கட்டு, சங்கேஸ்வர (வயது 74) - யாழ்ப்பாணம், அழகிதன் (வயது 1.5) - யாழ்ப்பாணம்;

எஸ்.ரஞ்சினி (வயது 32), மாங்குளம், கபிதன் (24 நாள்கள்) - மாங்குளம், எ.அந்தோனிப்பிள்ளை (வயது 74) - கிளிநொச்சி, தவராசா (வயது 53) - முள்ளியவளை, ஆர்.கந்தியா (வயது 75) - கிளிநொச்சி, செந்தூரம் (வயது 21) - கிளி நொச்சி, கே.மங்களேஸ்வரி (வயது 57) - யோகபுரம், என்.குருகுலசிங்கம் (வயது 61) - ஒட்டிசுட்டான், கே.விக்னேஸ்வரராஜா (வயது 36) - கிளிநொச்சி, எஸ். ராஜேஸ்வரி (வயது 62) - யாழ்ப்பாணம், பத்மலோஜனி (வயது 60) - கிளிநொச்சி, அப்புத்துரை (வயது 66) - முல்லைத்தீவு, பேபிகமலா (வயது 61) - முல்லைத்தீவு, பி.நந்தகுமார் (வயது 46) - முல்லைத்தீவு, ஜெ. சரூஜன் (வயது 1) -கிளிநொச்சி, ஜெயனி (வயது 25) - கிளிநொச்சி, முருகேசு (வயது 42) - யாழ்ப்பாணம், ரி.தயானந்தன் (வயது 55) - யாழ்ப்பாணம், செல்வநாயகமூர்த்தி (வயது 60) - யாழ்ப்பாணம், கமலாதேவி (வயது 71) - முல்லைத்தீவு, பி.ஆறுமுகம் (வயது 74) - முல்லைத்தீவு, எஸ்.செபஸ்ரியன் (வயது66) - உடையார் கட்டு, எஸ்.ஆறுமுகம் (வயது 64) - கிளிநொச்சி, என்.நாகேஸ்வரி (வயது 60) -முல்லைத்தீவு, டிசந்தினி (வயது 41) - கிளிநொச்சி, டிலக்சனி (வயது 41) - கிளிநொச்சி, வி.தலுக்ஷி (வயது 3) - கிளிநொச்சி, வி.சுசிதன் (வயது 20 - கிளிநொச்சி, வி.செல்வமலர் (வயது 47) - கிளிநொச்சி, ரி.ராதிகா (வயது 30) - யாழ்ப்பாணம், ரி.கஜானன் (வயது 2) - யாழ்ப்பாணம், ஆர்.கண்மணி (வயது 50) - கிளிநொச்சி, ரி.மகேஸ்வரி (வயது 57) - யாழ்ப்பாணம், கே.பரமேஸ்வரி (வயது 50) - யாழ்ப்பாணம், எஸ்.தனபாலசிங்கம் (வயது 59) - கிளிநொச்சி, என்.சுபாஜினி (வயது 29) - கிளிநொச்சி, என்.மாலினி (வயது 58) - கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்
# EASY WAY TO ENGLISH

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

## Last week continuity.....

**Being Verbs - இரு வினைச்சொல்**

The being verbs are all the forms of the verb to be; is, are, was, were, been
'இரு' என அர்த்தம் கூறும் வினைச்சொல் வடிவம் கீழ்க்காணுமாறு வரும்.

**AM, IS, ARE, ,WAS, WERE**

Now let,s see how they are used - தற்போது இவை எவ்வாறு பாவிக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

I am a teacher - நான் ஒரு ஆசிரியர்
You are a teacher - நீ ஒரு ஆசிரியர்
He is a boy -அவன் ஒரு பையன்
She is a teacher -அவள் ஒரு ஆசிரியை
They are teachers -அவர்கள் ஆசிரியர்கள்

### In Present Tense
### நிகழ்காலத்தில்

| Sentence வாக்கியம் | Negative எதிர்மறை | Question வினா |
|---|---|---|
| 01.I am a teacher. நான் ஒரு ஆசிரியர். | I am not a teacher. நான் ஒரு ஆசிரியர் அல்ல. | Am I a teacher? நான்ஒரு ஆசிரியரா? |
| 02.You are a teacher. நீ ஒரு ஆசிரியர். | You are not a teacher. நீ ஒரு ஆசிரியர் அல்ல. | Are you a teacher? நீ ஒரு ஆசிரியரா? |
| 03.He is a teacher. அவன் ஒரு ஆசிரியர். | He is not a teacher. அவன் ஒரு ஆசிரியர் அல்ல. | Is he a teacher?' அவன் ஒரு ஆசிரியரா? |
| 04.She is a teacher. அவள் ஒரு ஆசிரியர். | She is not a teacher. அவள் ஒரு ஆசிரியர் அல்ல. | Is she a teacher? அவள்ஒரு ஆசிரியரா? |
| 05.We are teacher. நாங்கள் ஆசிரியர்கள். | We are not teacher. நாங்கள் ஆசிரியர்கள் அல்ல. | Are we teacher? நாங்கள் ஆசிரியர்களா? |
| 06. They are teacher. அவர்கள் ஆசிரியர்கள். | They are not teacher. அவர்கள் ஆசிரியர்கள் அல்ல. | Are they teacher? அவர்கள் ஆசிரியர்களா? |
| 07. It is a dog . இது ஒரு நாய். | It is not a dog. அது இரு நாய் அல்ல. | Is it a dog? இது ஒரு நாயா? |

### Be Verb in Past Tense
### இறந்தகாலத்தில் Be வினைச்சொல்

As you can see, then the verb to be is unique.
நீங்கள் பார்க்கலாம், வினைச்சொல்லானது விந்தையானது.
Its present tense has three form.
இது நிகழ்காலத்தில் மூன்று வடிவங்களில் வரும்.

**AM** **ARE** **IS**

Its past tense has two forms.
இது இறந்தகாலத்தில் இரு வடிவங்களில் வரும்.

**WAS** **WERE**

Memorize this forms, because you certainly use them often.
இவ்வடிவங்களை ஞாபகத்தில் வைத்திருக்கவும். ஏனெனில், நீங்கள் நிச்சயமாக இவற்றைப் பலமுறை பாவிப்பீர்கள்.

### Be Verb in Past Tense
### இறந்தகாலத்தில் Be வினைச்சொல்

| Sentence வாக்கியம் | Negative எதிர்மறை | Question வினா |
|---|---|---|
| 01. I was a teacher. நான் ஒரு ஆசிரியராக இருந்தேன். | I was not a teacher. நான் ஒரு ஆசிரியராக இருக்கவில்லை. | Was I a teacher? நான் ஒருஆசிரியராக இருந்தேனா? |
| 02. You were teacher. நீ ஒரு ஆசிரியராக இருந்தாய். | You were not teacher. நீ ஒரு ஆசிரியராக இருக்கவில்லை. | Were you teacher? நீ ஒரு ஆசிரியராக இருந்தாயா? |
| 03. He was a teacher. அவன்ஒருஆசிரியராக இருந்தான். | He was not a teacher. அவன்ஒருஆசிரியராக இருக்கவில்லை. | Was he a teacher? அவன் ஒரு ஆசிரியராகஇருந்தானா? |
| 04. She was a teacher. அவள்ஒருஆசிரியராக இருந்தாள். | She was not a teacher. அவள் ஒரு ஆசிரியராக இருக்கவில்லை. | Was she a teacher? அவள் ஒரு ஆசிரியராக இருந்தாளா? |
| 05. We were teacher. நாங்கள்ஆசிரியர்களாக இருந்தோம். | We were not teacher. நாங்கள்ஆசிரியர்களாக இருக்கவில்லை. | Were we teacher? நாங்கள் ஆசிரியர்களாக இருந்தோமா? |
| 06. They were teacher. அவர்கள்ஆசிரியர்களாக இருந்தார்கள். | They were not teacher. அவர்கள்ஆசிரியர்களாக இருக்கவில்லை. | Were they teacher? அவர்கள் ஆசிரியர்களாக இருந்தார்களா? |

### Be Verb in Future Tense
### எதிர்காலத்தில் Be வினைச்சொல்

| Sentence வாக்கியம் | Negative எதிர்மறை | Question வினா |
|---|---|---|
| 01. I shall be a teacher. நான்ஒருஆசிரியராக இருப்பேன். | I shall not be a teacher. நான்ஒருஆசிரியராக இருக்கமாட்டேன். | Shall I be a teacher? நான்ஒருஆசிரியராக இருப்பேனா? |
| 02. You will be a teacher. நீ ஒரு ஆசிரியராக இருப்பாய். | You will not be a teacher. நீ ஒரு ஆசிரியராக இருக்கமாட்டாய். | Will you be a teacher? நீ ஒரு ஆசிரியராக இருப்பாயா? |
| 03. He will be a teacher. அவன் ஒரு ஆசிரியராக இருப்பான். | He will not be a teacher. அவன்ஒருஆசிரியராக இருக்கமாட்டான். | Will he be a teacher? அவன்ஒருஆசிரியராக இருப்பானா? |
| 04. She will be a teacher. அவள்ஒருஆசிரியையாக இருப்பாள். | She will not be a teacher. அவள்ஒருஆசிரியையாக இருக்கமாட்டாள். | Will shebe a teacher? அவள் ஒருஆசிரியையாக இருப்பாளா? |
| 05. We shall be teachers. நாங்கள் ஆசிரியர்களாக இருப்போம். | We shall not be teachers. நாங்கள்ஆசிரியர்களாக இருக்கமாட்டோம். | Shall we be teachers. நாங்கள் ஆசிரியர்களாக இருப்போமா? |
| 06. They will be teachers. அவர்கள் ஆசிரியர்களாக இருப்பார்கள். | They will not be teachers. அவர்கள்ஆசிரியர்களாக இருக்கமாட்டார்கள். | Will they be teachers? அவர்கள் ஆசிரியர்களாக இருப்பார்களா? |
| 07. that will be a dog. அது ஒரு நாயாக இருக்கும். | that will not be a dog. அது ஒரு நாயாக இருக்காது. | it be a dog? அது ஒரு நாயாக இருக்குமா? |

### CONJUGATION OF THE VERB
### வினைச்சொல்லின் பல்வேறு உருவங்கள்.

#### PRESENT TENSE
#### நிகழ்காலம்.

| INDEFINITE | PRESENT CONTINUOUS | PRESENT PERFECT | PRESENT PERFECT CONTINUOUS |
|---|---|---|---|
| I see. நான்பார்க்கிறேன். | I am seeing. நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். | I have seen. நான் பார்த்திருக்கிறேன். | I have been seeing. நான்பார்த்துக்கொண்டே இருக்கிறேன். |
| We see. நாங்கள்பார்க்கிறோம். | We are seeing. நாங்கள்பார்த்துக் கொண்டிருக்கிறோம். | We have seen. நாங்கள்பார்த்திருக்கிறோம். | We have beeseeing. நாங்கள் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். |
| She sees. அவள் பார்க்கிறாள். | She is seeing. அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாள். | She has seen. அவள் பார்த்திருக்கிறாள். | She has been seeing. அவள் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். |
| It sees. அது பார்க்கிறது. | It is seeing. அது பார்த்துக் கொண்டிருக்கிறது. | It has seen. அது பார்த்திருக்கிறது. | It has been seeing. அது பார்த்துக் கொண்டே இருக்கிறது. |
| They see. அவர்கள் பார்க்கிறார்கள். | They are seeing. அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். | They have seen. அவர்கள் பார்த்திருக்கிறார்கள். | They have been seeing. அவர்கள் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். |

#### PAST TENSE
#### இறந்தகாலம்.

| INDEFINITE | PASTCONTINUOUS | PAST PERFECT | PAST PERFECT CONTINUOUS |
|---|---|---|---|
| I saw. நான் பார்த்தேன். | I was seeing. நான் பார்த்துக் கொண்டிருந்தேன். | I had seen. நான் பார்த்தேன். | I had been seeing. நான்பார்த்துக் கொண்டே இருந்தேன். |
| We saw. நாங்கள் பார்த்தோம். | We were seeing. நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். | We had seen. நாங்கள் பார்த்தோம். | We had been seeing. நாங்கள் பார்த்துக் கொண்டே இருந்தோம். |
| You saw. நீ பார்த்தாய்/ நீங்கள் பார்த்தீர்கள் | You were seeing. நீ பார்த்துக்கொண்டிருந்தாய்/ நீங்கள் பார்த்துக்கொண்டிருந்தீர்கள் | You had seen. நீ பார்த்தாய்/ நீங்கள் பார்த்தீர்கள். | You had been seeing. நீ பார்த்துக்கொண்டே இருந்தாய்/நீங்கள் பார்த்துக்கொண்டே இருந்தீர்கள். |
| She saw. அவள் பார்த்தாள். | She was seeing. அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். | She had seen. அவள் பார்த்தாள். | She had been seeing. அவள்பார்த்துக் கொண்டே இருந்தாள். |
| He saw. அவன் பார்த்தான். | He was seeing. அவன் பார்த்துக் கொண்டிருந்தான். | He had seen. அவன்பார்த்தான். | He had been seeing. அவன்பார்த்துக் கொண்டே இருந்தான். |
| It saw. அது பார்த்தது. | It was seeing. அது பார்த்துக் கொண்டிருந்தது. | It had seen. அது பார்த்தது. | It had been seeing. அது பார்த்துக் கொண்டே இருந்தது. |
| They saw. அவர்கள் பார்த்தார்கள். | They were seeing. அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். | They had seen. அவர்கள்பார்த்தார்கள். | They had been seeing. அவர்கள் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FUTURE TENSE
### எதிர்காலம்.

| INDEFINITE | FUTURECON-TINUOUS | FUTURE PERFECT | FUTURE PERFECT CONTINUOUS |
|---|---|---|---|
| I shall see.<br>நான் பார்ப்பேன். | I shall be seeing.<br>நான் பார்த்துக்கொண்டிருப்பேன். | I shall have seen.<br>நான் பார்த்திருப்பேன். | I shall have been seeing.<br>நான் பார்த்துக் கொண்டே இருப்பேன். |
| We shall see.<br>நாங்கள் பார்ப்போம். | We shall be seeing.<br>நாங்கள் பார்த்துக் கொண்டிருப்போம். | We shall have seen.<br>நாங்கள் பார்த்திருப்போம். | We shall have been seeing.<br>நாங்கள் பார்த்துக் கொண்டே இருப்போம். |
| You will see.<br>நீ பார்ப்பாய் | You will be seeing.<br>நீ பார்த்துக் கொண்டிருப்பீபாய். | You will have seen.<br>நீபார்த்திருப்பாய். | You will have been seeing.<br>நீபார்த்துக்கொண்டே இருப்பாய். |
| He will see.<br>அவன் பார்ப்பான். | He will be seeing.<br>அவன் பார்த்துக் கொண்டிருப்பான். | He will have. seen<br>அவன் பார்த்திருப்பான். | He will have been seeing.<br>அவன் பார்த்துக் கொண்டே இருந்திருப்பான். |
| She will see. | She will be seeing. | She will have seen. | She will have been seeing. |

## FULL VERBS AND AUXILIARIES
### பூரண வினைச்சொற்களும் துணை வினைச்சொற்களும்

**English has two kinds ofverbs.**
ஆங்கில வினைச்சொற்கள் இரு வகைப்படும்.

1. Full verb - பூரண வினைச்சொல்.
2. Auxiliaries - துணை வினைச்சொற்கள்.

இவை பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

Can I help you?Are you coming?Should we tell her?
மேற்காணும் வாக்கியங்களில் Can, Are, Should துணை வினைச்சொற்கள் ஆகும். அதேபோல் help, coming, tell என்பன பூரண வினைச்சொற்கள் ஆகும்.

### FULL VERBS - பூரண வினைச்சொற்கள்

"tell you what happened"or"what the situation is"
என்ன நடந்தது அல்லது எப்படியான நிலைமை என்பதைக் கூறும்.

Usually have four forms - எப்போதும் நான்கு படிமுறைகள் இருக்கும்.
walk, walks, walked, walking

An irregular verb can have five forms - ஒழுங்கற்ற வினைச்சொல் ஐந்து படிமுறைகளில் வரும்.
go, goes, went, gone, going

## AUXILIARY or HELPING VERBS
### துணை வினைச்சொற்கள் அல்லது உதவி வினைச்சொற்கள்.

துணை வினைச்சொற்கள் தனி வகையைச் சேர்ந்தவை. நாம் பொதுவாக முதற் பாடங்களில் படித்த வினைச்சொற்களுக்கும், இவ் வினைச்சொற்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன.

**Can, Could, May, Might, Will, Would, Shall, Should, Must, Ought to**

இவை *மொடல்ஸ் (Models)* என அழைக்கப்படும்.

The models add extra meaning - model ஆனது மேலதிக கருத்தை வழங்கக்கூடியது.

Auxiliaries used to make structures - --துணை வினைச்சொல் ஆனது சீரான அமைப்பு முறையை உருவாக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Be | - am | is | are | was | were been being | |
| Have | - has | have | had | having | | |
| Do | - do | does | did | done | doing | |

Be – எந்த வேளையிலும் துணை வினைச்சொல்லாக வரும்.
Have - சில வேளைகளில் துணை வினைச்சொல்லாகவும், சில வேளைகளில் பூரண வினைச்சொல்லாகவும் வரும்.

துணை வினைச்சொற்களுக்கும் (Auxiliaries) பிரதான வினைச்சொற்களுக்கும் உள்ள வேற்றுமையை வாக்கியங்களில் கவனிப்போம்.

| | |
|---|---|
| 1. I can write English.<br>என்னால் ஆங்கிலம் எழுதமுடியும். | I write English.<br>நான் ஆங்கிலம் எழுதுகிறேன். |
| 2. You can write English.<br>உன்னால் ஆங்கிலம் எழுதமுடியும். | You write English.<br>நீ ஆங்கிலம் எழுதுகிறாய். |
| 3. He can write English.<br>அவனால் ஆங்கிலம் எழுதமுடியும். | He writes English.<br>அவன் ஆங்கிலம் எழுதுகிறான். |
| 4. She can write English.<br>அவளால் ஆங்கிலம் எழுதமுடியும். | She writes English.<br>அவள் ஆங்கிலம் எழுதுகிறாள். |
| 5. We can write English.<br>எங்களால்ஆங்கிலம் எழுதமுடியும். | We write English.<br>நாங்கள்ஆங்கிலம் எழுதுகிறோம். |
| 6. It can write English.<br>அதனால் ஆங்கிலம் எழுதமுடியும். | It writes English.<br>அது ஆங்கிலம் எழுதுகிறது. |
| 7. They can write English.<br>அவர்களால் ஆங்கிலம் எழுதமுடியும். | They write English.<br>அவர்கள்ஆங்கிலம் எழுதுகிறார்கள். |



மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் இடைவேளை நிகழ்வில் மாணவிகள் உடற்பயிற்சிக் கண்காட்சி வழங்கிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். (100)



சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. மாணவர்கள் அணிநடையின் பின் சத்தியப் பிரமாணம் செய்கின்றனர்.



குடத்தனை அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் கிளை முகாமையாளர் மு.சிவநேசன் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுகின்றார். அருகில் பாடசாலை அதிபர் [illegible] மற்றும் தங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி கே.தேவராஜா வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார்.
(படம்: நவாலி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி

### ஒப்பந்த அடிப்படையில் கிளை முகாமையாளர் பதவி

எமது சங்கத்தில் ஒப்பந்த அடிப்படையில் கிளைமுகாமையாளர் பதவிக்குத் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி: கிளைமுகாமையாளர் - ஒப்பந்த அடிப்படையில்
02. சம்பள அளவுத்திட்டம்: 9450 - 11000 (2006 சுற்றறிக்கைப்படி) 75X10-80X10
03. வயதெல்லை: 18-45 வருடங்கள் (183/90 சுற்றறிக்கைக்கமைவாக)
04. தகைமை: கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம் க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
05. விண்ணப்ப முடிவுத் திகதி: **12.05.2009**

மேலதிக விவரங்களுக்குத் தலைமைக் கந்தோருடன் தொடர்புகொள்ளவும்.

நீர்வேலி கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. **பொதுமுகாமையாளர்.**
2009.02.25. (சி/557283)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### R.பத்மராணி
(கட்டுவனூர்,
திரு.பொ.கனகரத்தினத்தின் மகள்)

தோற்றம்: 18.01.1955
மறைவு: 22.02.2007
துதியை: 27.02.2009

அன்பு மகள் சிவபதமடைந்து இரண்டாண்டாகின்ற நிலையில் உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். உனது மகளின் கவலை நீங்க இறைவனிடம் மன்றாடுகின்றோம்.
ஸ்ரீ மகா கணபதியை துதிக்கிறோம்.

பழைய நீதிமன்ற வீதி,
மல்லாகம். **தந்தை.**

## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



28.01.2009 புதன்கிழமை
அமரத்துவம் அடைந்த
அமரர்
### வே.புண்ணியமூர்த்தி
(உரிமையாளர், மகாலஷ்சுமி அச்சகம்,
சுதுமலை, யாழ்ப்பாணம்)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'
அழைத்தனனோ ஆலவாயான்! இன்புற்றிருக்க ஈசனடி தந்தனனோ உந்தனுக்கு!
உத்தமரே ஊர் போற்ற வாழ்ந்தவரே என்னே அவசரம் ஏன் இந்த கோலமாற்றம்!
ஐங்கரன் விக்கினங்கள் களைந்து வழிகாட்டியருள
திருவாலவாயான் திருப்பொற்பாதம் தந்தாட் கொண்டனனோ! எமது உறவுச் செல்வமே
பொன்னுடல் களைந்து புகழ் உடம்பானீரோ! ஐயா புண்ணியனே!

தங்களது ஆத்மா சாந்தி அடையவும் உங்களைப் பிரிந்து வாடும் குடும்பத்தினரையும் காத்தருள ஆலவாயானை பிரார்த்திக்கின்றோம்.
'ஆன்மா நித்தியமானது அழிவதில்லை'
ஓம் சாந்தி!

264, 15B நாவலடி லேன்,
யாழ்.றோட், மானிப்பாய்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்:
த.தில்லைநாதன் (பபா மாமா) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
05
.
04
.
1928



உதிர்வு
28
.
01
.
2009

### திருமதி கதிர்காமத்தம்பி கனகலட்சுமி

கடந்த 28.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவருக்குச் சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கும் அன்னாருக்காகச் சிறந்த சேவையை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (27.02.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி,
ஆனைக்கோட்டை.
மகள், மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## திடீரெனத் தீப்பற்றி எரிந்தது கார்

யாழ்ப்பாணம், பெப்.27

வாகனம் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றில் நின்ற கார் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்.நகர் வெலிங்டன் வீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட காரின் 'சைலன்சர்' பகுதியை ஒட்டிக்கொண்டிருந்த சமயம் ஒட்டின் பொறி காரின் பெற்றோல் தாங்கியில் பட்டதால் பாரிய சத்தத்துடன் வெடித்துத் தீப்பற்றிக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

காரின் அடிப்பகுதியில் தாங்கியை ஒட்டிக் கொண்டிருந்த நபர் காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

தீப்பற்றிய கார் ஒருவாறு தண்ணீர் ஊற்றி அணைக்கப்பட்டது.

காரின் இன்ஜின் பகுதி தவிர ஏனைய பகுதிகள் தீயில் எரிந்து சேதமடைந்ததாகக் கூறப்பட்டது. (203-224)

## விசேட கல்விச் செயலமர்வு

வேலணை, பெப்.27

தீவக வலயப் பாடசாலைகளில் 2009ஆம் வருடத்திற்கான விசேட கல்வி அமுல்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை வண்ணார்பண்ணை, நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் விசேட கல்விப் பொறுப்பாசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-267)

## ஊரெழுவில் தற்காலிக வீடுகள்

வண்ணை, பெப்.27

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஊரெழு ஜே/267 கிராம சேவையாளர் பிரிவில் தங்கியுள்ள 16 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளையும் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் அமைத்து வருகின்றது.

நிர்மாண வேலைகள் பூர்த்தியானதும் பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17 வருடங்களாகச் சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் கடந்த 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த போதும் கடந்த வருட இறுதியில் வீசிய 'நிஷா' புயல், பெருவெள்ளத்தாலும் தமது தற்காலிக இருப்பிடங்களை இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(203-160)

## முதலுதவிப் பயிற்சி வகுப்புகள்

நவாலி, பெப்.27

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் 313 பேருக்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை 'மெடிக்கல் இன்ஸ்ரி ரியூட்டின்' ஆதரவுடன் முதலுதவிப் பயிற்சி நெறி வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

தினமும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் இப் பயிற்சி வகுப்புகளில் அலுவலக உத்தியோகத்தர்கள், நலன்புரி நிலைய ஊழியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

(203-100)

## வாடகைக்கு

அறைகள்/பகுதி வீடு சுண்டுக்குளியில் வாடகைக்கு உண்டு. St.Patrick's, St.Johns, Chundikuli Girls College இற்கு அண்மையில். தொடர்பு 67/2, குருசோ வீதி, சுண்டிக்குளி. (83042)

## தவறிவிட்டது

அளவெட்டி தெற்கு, அருவம்பற்று என்னும் விலாசமுடைய தயாபரன் மன்மதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (782183257V), விசேட அடையாள அட்டை அடங்கிய பேஸ் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து [illegible] 0779697272 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/557287)

## நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் 'நிஷா' பாதித்தோருக்கு உதவிகள்

நல்லூர், பெப்.27

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 136 குடும்பங்களுக்கு 'நிஷா' வெள்ள அனர்த்த நிவாரண உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

'நிஷா' அனர்த்தப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கென 'போடே' நிறுவனம் உலர் உணவு தவிர்ந்த வீட்டுப் பாவனைக்குரிய பொருள்களை வழங்கியிருந்தது.

தலா 9ஆயிரத்து 50ரூபா பெறுமதியான பொருள்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டதாக நல்லூர்ப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203-111)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின்
மடியில்
12
.
06
.
1930



ஆண்டவன்
அடியில்
10
.
03
.
2008

### அமரர் ஆறுப்பிள்ளை இரத்தினம்

திதி: 27.02.2009 துதியை

ஆண்டுகள் ஒன்று அல்ல ஆயிரம் கடந்தாலும்
உங்கள் அன்பு முகம் என்றும் எம்முடன் வாழும்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (83041) **குடும்பத்தினர்.**

## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



### ஓராண்டு
திருமதி ஹரியட் தம்பிநாயகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
தோற்றம்: *21.12.1910*
கர்த்தருக்குள் *27.02.2008*



### 12 ஆம் ஆண்டு
R.T. தவநாயகம்
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
தோற்றம்: *17.09.1951*
கர்த்தருக்குள் *26.01.1997*



### 14 ஆம் ஆண்டு
செல்வி விமலா தம்பிநாயகம்
(கணக்காளர் மக்லியட் வைத்தியசாலை, இணுவில்)
தோற்றம்: *25.09.1957*
கர்த்தருக்குள் *24.7.1995*



### 40 ஆம் ஆண்டு
J.V.தம்பிநாயகம்
(அதிபர், சா/ டிறிபேர்க் கல்லூரி)
தோற்றம்: *13.10.1912*
கர்த்தருக்குள் *22.04.1969*



### 37 ஆம் ஆண்டு
J.K.நன்னித்தம்பி
தோற்றம்: *1877*
கர்த்தருக்குள் *20.06.1972*

'மனிதருக்கென்று ஊழியம் செய்யாமல்
கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம்
செய்யுங்கள்.' (எபேசியர் 6:8)

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. (82997) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை வளாகத்தில் அமைந்துள்ள புனர்நிர் மாணம் செய்யப்பட்ட ஞானவைரவர் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவின்போது வைரவப் பெருமான் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*

## நாவாரப் பாடுவோம் தேவாரம்

ஞானக்கதிர்

தேவாரம் வேதசாரம். மூவர் பாடிய தீந்தமிழ்ப் பனுவலான தேவாரம் தித்திக்கும் அமுதம் போன்றது. படிக்கப் படிக்க இன்பந் தருகின்ற இனிமையான தேவாரம் சைவ மக்களின் அரும்பெருஞ் சொத்தாகும்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் அற்புதங்கள் செய்து அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் பண்ணோடு ஓதப்பெறும்போது அமுதமென இனிக்கும் தன்மை வாய்ந்தவை. ஒவ்வொரு பாடல்களும் உள்ளந்தோறும் உவகை தரும் தீம்பாலமுதமாகும். உதாரணமாக ''சிறையாரும் மடக்கிளியே இங்கே வா! தேனோடு பால் முறையாலே உணத் தருவன்'' என்ற பதிகத்தில் காணப்படும் ஆழமான கருத்து சிந்திக்கச் சிந்திக்க உள்ளத்தில் உவகை பொங்குகின்றது. ஒருமுறை பாடிப் பாருங்கள்.

ஆகவே, தேவாரம் உணர்ந்து ஓதப்படவேண்டிய ஒன்றாகும். இதன் தாற்பரியம் என்னவென்றால் பண்முறை பிறழாமல் தாளத்தோடு முறையான வரிக்கிரமத்தை உணர்ந்து சொற்களைப் பிரித்து ஓதும்போது வரும் சுகமே வேறு. இஃது அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

தேவாரம் ஓதப்படும் வேளை பண், ராகம், தாளம், வரிக்கிரமம், பிழையின்மை என்பன கவனிக்கப்படவேண்டும். ''பித்தாபிறை சூடி பெரு... மானே அருளாளா'' என்று பாடுதல் தவறாகும். சிவபெருமானின் அருள்பெற்ற நாயன்மார் பாடிய தேவாரத்தை நாம் பிழையாகக் கொண்டு கூட்டிப் பாடுவது பிழை.

ஆலயங்களில் திருமுறைகள் ஓதப்பெறும்போது கட்டாயம் இது கவனிக்கப்பட வேண்டும். பஞ்சபுராணம் பாடும்போது பிழை விட்டால் அது மாபெரும் குற்றமாகும். சரியான பண்ணில் எழுத்துப் பிழையின்றி தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்று கிரமந் தவறாமல் ஓதப்பட வேண்டும். ஈற்றில் வாழ்த்துப் பாடலாம். ஆனால் திருப்புகழ் சேர்க்கப்படவேண்டிய அவசியமில்லை.

அத்துடன், புராணம் என்று சொன்னால் அது சேக்கிழார் பாடியதாகவே இருத்தல் வேண்டும். வேறு புராணங்கள் பாடுவது முறையல்ல ஆலயங்களில் ஓதுவார்களாகத் திருப்பணி புரிபவர்கள் இதனைக் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும். தேவாரம் ஓதப்பெறும்போது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உள்ளம் நெக்குருக வேண்டும். சும்மா நாங்களும் பாடுகின்றோம் என்று பாடக்கூடாது. பாடுபவரும் கேட்பவர்களும் தன்னை மறந்த ஒரு தெய்வீகப் பக்குவநிலைக்கு வரவேண்டும். செய்வார்களா?

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## தவக்காலச் சிந்தனை

### வளங்களைக் கொண்டு மனிதத்தை உயர்த்துவோம்

சுகபோகங்களை அனுபவித்து வந்த செல்வந்தரின் வீட்டுவாசலில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட லாசர் என்னும் ஏழையிருந்தான். செல்வருடைய உணவு மேசையில் இருந்து விழும் சிறு துண்டுகளால் தமது பசியாற்றி வந்தார். இருவரும் இறந்தனர். ஏழை விண்ணக மகிமையிலும்செல்வர் நரக நெருப்பிலும் சேர்க்கப்பட்டனர்.

ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறு பெற்றோர் அவர்கள் நீரருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர். (ஏரே 17.7).

இவ்வுலகில் இறைவனில் நம்பிக்கை கொள்ளாது சுகமாக மனம் போன போக்கில் வாழ முற்பட்டால் மறு உலகு எதிர்மாறாக இருக்கும். துன்பங்கள், வறுமை நோய்களால் வாடுவோரை ஏற்றுக்கொண்டு உதவமுற்பட்டால் மறுவாழ்வை மகிமையுள்ளதாக இறைவன் வழங்குவார். கிடைத்தற்கரிய மனிதப் பிறப்பிலே அளவுக்கு அதிகமாகச் சேர்த்துவைத்து பழிகூறுவதை நிறுத்துவோம். திடீரென நாம் இறக்கநேரிட்டால் அந்தச் செல்வங்கள் யாருக்குப் பயன் தரும்?

எனவே, வாழும்போதே இறைவன் தந்த உலக செல்வங்களை இல்லாதோருடன் பகிர்ந்து வாழ்வோம். அப்போது வானக செல்வத்தைக் கடவுள் அனைவருக்கும் சமமாக அளிப்பார் என நம்புவோம். நிலையில்லாச் செல்வங்களைக் கொண்டு நிலையான மனிதநேயத்தைக் கட்டியெழுப்புவோம்.

எஸ்.போசுதாஸ், கொழும்புத்துறை.



ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனத்தினால் அண்மையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருவருட டிப்ளோமா பாடநெறி பட்டநிறைவு விழா நடத்தப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியையும் தீவக முன்பள்ளி இணைப்பாளருமான திருமதி எஸ்.பாரதி வரவேற்புரை நிகழ்த்துவதையும் நிறுவனப் பணிப்பாளர் பா.தனபாலன், பிரதம விருந்தினர்களாக எஸ்.ஆர்.வேதநாயகம், திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். [illegible] கல்லூரி நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ஆர்.கமலநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## செய்திச் சரம்...செய்திச் சரம்...

### பெரியவிளான் றோ.க.த.கவின் விளையாட்டு விழா

நவாலி,பெப்.27

பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் ந.இலட்சுமண சர்மாவும் பாரியார் நாகேஸ்வரியும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விளையாட்டுப் போட்டிக்கான பரிசில்களுக்கு அனுசரணை வழங்கினர்.

அத்துடன் 93 மாணவர்களுக்கு வங்கியினால் ஆரம்ப வைப்பு இடப்பட்டு கணக்கு ஆரம்பித்துப் புத்தகங்களையும் வழங்கியுள்ளனர். (203-100)

### புங்குடுதீவு - நயினாதீவு சங்கக் களஞ்சியம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியம் புனரமைக்கப்பட்டு வருவதாகச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி கே.இராஜரட்ணம் தெரிவித்தார்.

இக்களஞ்சியப் புனரமைப்புப் பணிக்கென 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (203-224)

### முருங்கைக் காய்க்கு மவுசு

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.நகர் மரக்கறிச் சந்தைகளில் முருங்கைக் காய்க்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ முருங்கைக்காய் 800 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது இதன் சீசன் ஆரம்பமாகியதை அடுத்து சிலர் பிஞ்சாகவே அதனைப் பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர். (203-224)

### மாணவர்களுக்கு காலணிகள்

வண்ணை,பெப்.27

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் காலணி மற்றும் காலுறைகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில் குருநகர் சென்.றோக் பாடசாலை மாணவர்கள் 96 பேருக்கும் கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலை மாணவ, மாணவிகள் 260 பேருக்கும் கரவெட்டி, விக்னேஸ்வரா வித்தியாலய மாணவ, மாணவிகள் 40 பேருக்கும் வசாவிளான், குட்டியபுலம் அ.த.க. பாடசாலை மாணவ, மாணவிகள் 158 பேருக்கும் இம்மாதம் காலணி மற்றும் காலுறைகள் வழங்கப்பட்டுள்ளன. (203-160)

### ஆனைக்கோட்டை கிராம சேவை அலுவலகம் புதிய இடத்தில்

நவாலி,பெப்.27

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் அலுவலகம் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை, ஆனைக்கோட்டை வீதியில் சொந்தக் காணியில் கடந்த சனிக்கிழமை கிராம சேவையாளர் வை.சந்திரராசாவினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் அப்பிரிவு முதியோர் சங்கத்தினர், மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர், ஆனைக்கோட்டைக் கடற்றொழில் சங்கத்தினர், விவசாய சம்மேளனத்தினர், மாதர் சங்கத்தினர், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (203-100)

### இளவாலையில் வாழ்வாதாரத் திட்டம்

வண்ணை,பெப்.27

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்ட அடிப்படையில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் ஆடு வளர்ப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

ஒரு மறி ஆடு 10ஆயிரம் ரூபா செலவில் 25 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவிக்கிறது.

மேலும் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 50 பேருக்கு மண்வெட்டி மற்றும் விவசாயத் தோட்ட வேலைகளைச் செய்யும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-160)

### வாழையுடன் வாழைக்குலை சோடி 10ஆயிரம் ரூபா

கோப்பாய்,பெப்.27

மங்கள நிகழ்விற்காக முகப்பு வாயில்களில் கட்டப்படும் வாழையுடன் சேர்த்த வாழைக்குலைகளிற்குப் பெரும் கிராக்கி நிலவுகிறது.

தற்போது வாழையுடன் சேர்ந்த சோடி வாழைக்குலைகள் பத்தாயிரம் ரூபா தொடக்கம் விலை போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வாழைக்குலைகளைத் தேடிப் பல இடங்களிற்கும் அலையவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

### ஆங்கில ஆசிரியர் இன்றி இயங்கும் நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை

யாழ்ப்பாணம்,பெப்.27

கடந்த பல வருடங்களாக ஆங்கில மொழி கற்பிப்பதற்கான ஆசிரியர் ஒருவர் இன்றி நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகத்தினர் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர் இன்றி இருந்து வரும் இப்பாடசாலைக்கு ஒருவரை நியமித்துத் தருமாறு பாடசாலைச் சமூகம் யாழ்.வலய கல்வித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தரம் ஐந்து வரையான இப்பாடசாலை மாணவர்களுக்கு தற்போது ஆங்கிலநெறி ஏனைய பாட ஆசிரியர்களாலேயே போதிக்கப்பட்டு வருகிறது. (203-224)

### ஓய்வூதியத் திட்டத்தில் இணைய ஆர்வம்

நவாலி,பெப்.27

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் சமூக ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 325 பேர் இணைந்து கொண்டனர்.

• இத்திட்டத்தில் மேலும் பலர் இணைவதற்கு ஆர்வம் காட்டி வருவதாகக் கிராம சேவையாளர் வை.சந்திரராசா தெரிவித்தார். (203-100)

### தொழில்பயிற்சிக்கு விண்ணப்பித்தோரின் காசோலைகள் தேக்கம்

நவாலி,பெப்.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக்கு விண்ணப்பம் செய்தவர்களின் காசோலைகள் நீண்ட நாள்களாகக் காத்துக் கிடக்கின்றன.

பின்வரும் பெயர், முகவரியுடையவர்கள் உடன் செயலகத்திற்கு வருகைதந்து காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.அருந்தவராசா கேட்டுள்ளார்.

அ.இ.உமாதேவி - ஜே/134, வரகு சாட்டி வீதி, நவாலி வடக்கு, வி.ரதி - ஜே/140, கட்டுடை, மானிப்பாய், மேரி அருணா - ஜே/139, காளிகோயிலடி, மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி, மேரி விஜயகுமாரி - ஜே/133, ஆனைக்கோட்டை, இ.விஜயலட்சுமி - ஜே/140, டச்சு வீதி, கட்டுடை, தற்செயல் நிவாரணம் பெறவேண்டியவர் தி.றஜிதா - சாந்தை, சில்லாலை வடக்கு. (203-100)

### தொல்புரம் முதியோர் இல்லத்தில் காப்பகம்

சுழிபுரம்,பெப்.27

வழக்கம்பரை, தொல்புரத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் அவர்களின் நன்மைகருதி காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்பகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பாவனையில் இருந்த ஒற்றை மாட்டு திருக்கல் கூடாரம் அமைத்த வண்டில், 'ஏ போட்டி' மோட்டார் கார், தட்டிவான் ஆகியன நிறுத்தப்பட்டுள்ளன.


• இந்த வாகனங்களை முதியோர்கள் பார்த்து மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.

முதியோர் இல்லத் தலைவர் ஆறு.திருமுருகன் மேலும் பல பழைமை வாய்ந்த வாகனங்கள் மேற்படி காப்பகத்தில் நிறுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

பொறியியலாளரான என்.கனகசபை தமது பழைமையான நல்ல நிலையிலுள்ள 'மொறிஸ்மைனர்' மோட்டார் வாகனத்தைப் பாவனைக்கும், காட்சிக்குமாக முதியோர் இல்லத்திற்குக் கடந்த வருடம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது (201-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வடக்கின் மாபெரும் போர்’ காட்சிகள்



வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான மூன்று நாள் கிரிக்கெட் போட்டி நேற்று வியாழக்கிழமை மிகவும் அமைதியான முறையில் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணி களத்தடுப்பில் ஈடுபடுவதையும் யாழ்.மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடுவதையும் இரு கல்லூரிகளின் மாணவர்கள் பாடசாலைக் கொடிகளுடன் மைதானத்தில் ஆரவாரிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சி.அன்பரசி

**பெறுபேறு: 2ஏபி (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)**

நான் க.பொ.த.சாதாரணக் கல்வி வரை இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் கற்றேன். உயர்தரக் கல்வியினை கற்பதற்குச் சிறந்த ஆசிரியர் குழாம் கொண்ட உடுப்பிட்டி அ.மி.கல்லூரிக்குச் சென்றேன். கலைத்துறையில் தமிழ், அளவையியல், பொருளியல் ஆகிய பாடங்களை தெரிவு செய்தேன். தற்கால அசாதாரண சூழ்நிலையால் பல இடையூறுகள் கல்வித்துறையினையும் பாதித்த போதும் ஊக்கத்தோடு, கல்வி புகட்டிய எமது ஆசான்களுக்கும் எனது பெற்றோருக்கும், தனியார் கல்வி நிறுவனத்திற்கும் இத்தருணம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் ஒரு வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது தந்தை சாதாரண தச்சுத் தொழிலாளி. தாய் வீட்டுப் பணி. இதனால் என் குடும்பம் செல்வம் செழித்துக் காணப்படாத போதும், உயரிய வாழ்வுக்காகச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை கல்விச் செல்வத்தினால் மட்டுமே பெற்றுக் கொள்ளலாம் என்ற மன உறுதியோடு, ஆசிரியர்களின் உதவியோடு சிறந்த பெறுபேற்றினைப் பெறக் கூடியதாக இருந்தது.



## நிசாந்தினி நடராசமூர்த்தி

**பெறுபேறு: ஏ2பி (வட இந்து மகளிர் கல்லூரி)**

நான் தரம் ஒன்றிலிருந்து 5 வரை மிருசுவிலில் றோமன் கத் தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றேன். பின்பு நாட்டுப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு வந்தேன். இங்கு இடம்பெயர்ந்து இயங்கிய பளை மத்திய கல்லூரியில் 6 இலிருந்து 9ஆம் தரம்வரை கற்று அதன் பின்பே வட இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்றேன். சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்தில் கலைத் துறையை தெரிவு செய்தேன். நான் கலைத்துறையில் பொருளியல், புவியியல், தமிழ் ஆகிய பாடங்களை தெரிவு செய்து படித்தேன். எனது கல்விச் செயற்பாட்டுக்கு பாடசாலை சமூகமும், தனியார் கல்வி நிலையமும், பெற்றோரும் உதவி செய்தனர். எனது பாட ஆசிரியர்களின் ஊக்குவிப்புக்களும் எனது விடாமுயற்சியும் பெற்றோரின் உந்து சக்தியுமே என்னை இந்நிலைக்கு இட்டுச் சென்றது என்று கூறுகையில் மகிழ்ச்சியடைவதோடு, அவர் களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தாலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதிலே எனது குடும்பத்தினரும் ஆர்வமாக இருந்தனர். எனது மூத்த சகோதரி வர்த்தகத்துறையில் இரண்டாம் வருட மாணவியாகப் படித்துக் கொண்ருக்கின்றார்.எனது கற்றல் செயற்பாட்டிற்கு தேவையான வளங்கள் அனைத்தையும் தந்த எமது பாடசாலை மாதாவிற்கு நன்றி செலுத்துவதோடு, கற்றல் செயற் பாட்டுக்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனத்தினர், மூத்த சகோதரர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, எதிர்காலத்தில் ஒரு சமூகசேவையாளராக வர இறைவன் ஆசி என்றும் இருக்கும் என நம்புகின்றேன்.

சந்திப்பும், படங்களும்: ஓளண்யன், குமரன், கணேசமூர்த்தி. 25



## சிறில் மயூரன்

**பெறுபேறு: 2ஏபி (விக்னேஸ்வராக் கல்லூரி)**

நான் தரம் ஒன்று முதல் தரம் 5 வரை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும் தரம் 6 மு ல் உயர்தர வகுப்புவரை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்றேன். எனது தந்தை ஒரு கடற்தொழிலாளி. எனது பெற்றோர்களும் சகோதர, சகோதரிகளும் எனது கல்வியில் அதிக அக்கறை காட்டினர். நான் எனது மாமாவின் வீட்டில் இருந்து கல்வி கற்றேன். மின்சாரம் இல்லாத வேளையிலும் குப்பி விளக்கிலேயே கல்வி கற்றேன்.

நான் எதிர்பார்த்த பெறுபேறு எனக்குக் கிடைத்தது. நான் கல்வி கற்கும் காலத்தில் விளையாட்டிலும் அதிக அக்கறை காட்டினேன். பலர் என்னை விளையாட்டைக் குறைத்து கல்வியில் ஆர்வமாக இருக்குமாறு கூறினார்கள். நான் இரண்டிலும் அக்கறை காட்டினேன். இந்த வேளையில் என்னை இந்நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



## சத்தியசீலன் லதர்ஷன்

**பெறுபேறு: 2ஏபி (கோக்குவில் இந்துக் கல்லூரி)**

என்னுடைய சுயமுயற்சியும், தேடலுமே நான் சிறந்த பெறுபேற்றைப் பெறக் காரணமாக அமைந்தது. என்னுடைய தேடலுக்குத் தீனி போடும் இடமாக நூலகமே இருந்தது. ஆனாலும் நான் எதிர்பார்த்த அளவிற்கு இப்பெறுபேறு அமையவில்லை என்பதே எனது வருத்தமாகும். ஆனால் இப்பெறுபேற்றால் என்னை விட எனது பொற்றோரேமிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

நான் இப்பெறுபேற்றைப் பெற என்னுடைய பெற்றோர்கள் உறுதுணையாக இருந்ததுடன் கல்லூரி அதிபர், எனக்கு கல்வி போதித்த கல்லூரி, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், என்னுடைய நண்பர்கள் ஆகியோர் எனக்கு வழிகாட்டிகளாகவும் பக்கபலமாகவும் இருந்தனர். நான் தனியே கல்வியுடன் மட்டும் நின்று விடாது விளையாட்டுத்துறையிலும் சாதிக்க வேண்டும் என்று ஆர்வத்துடன் ஈடுபட்ட போதிலும் அத்துறையில் என்னால் பிரகாசிக்க முடியவில்லை.

எதிர்காலத்தில் வியாபார நிர்வாகத் துறையில் உயர் பதவியைப் பெறவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



## சிங்கராஜா கௌதமி

**பெறுபேறு: 2ஏபி (தேவரையாளி இந்துக் கல்லூரி)**

நான் தரம் 1இலிருந்து உயர்தரம் வரை தேவரையாளி இந்துக் கல்லூரியிலேயே கல்வி கற்றேன். நான் உயர்தரத்தில் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற இலக்குடன் கலைத்துறையைத் தெரிவுசெய்து தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களை முழு மனதுடனேயே கற்றேன். நான் 3ஏ கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் 2ஏபி தான் கிடைத்தது. ஆயினும் மாவட்ட நிலையில் 53இனைப் பெற்றுக்கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது பெற்றோர் எனக்கு எதுவித இடையூறுமின்றி ஆதரவு தந்து ஊக்குவித்தார்கள். அடுத்து பேரூக்கம் தந்த எனது சகோதரருக்கும் நன்றியுடையேன். மேலும் எனது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் எனது பெறுபேற்றிற்கு காரணமாக அமைந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் போன்றோருக்கும் நான் நன்றி கூறுகின்றேன். எனது கல்லூரி படிப்பில் கடவுள் நம்பிக்கையும் நிறைய நேரம் படிப்பதைவிட எவ்வளவு நேரத்தில் எந்தளவு கிரகித்தேன் என்பது. தினந்தோறும் ஒழுங்காகப் படிப்பது முக்கியமாக இருந்தன. எதிர்காலத்தில் கல்வி உயர்வு பெற்று அனைவருக்கும் சமூகசேவை செய்யவேண்டும் என்பதே எனது இலட்சியம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு




இஸ்தான்புல், பெப். 27

நெதர்லாந்து ஆம்ஸ்ரர்டாம் சிபோல் விமான நிலையத்தில் நிகழ்ந்த விமான விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்வடைந்துள்ளது. இதில் எண்பது பேர் வரை காயமடைந்துள்ளனர். இவ்விபத்து தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

127 பயணிகள், 7 விமானச் சிப்பந்திகள் ஆகியோருடன் இஸ்தான்புல்லிலிருந்து புதன்கிழமை புறப்பட்ட இவ்விமானம் ஆம்ஸ்ரர்டாம் விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளாகி மூன்று கூறுகளாக உடைந்தது. இது துருக்கிய விமானச் சேவையைச் சேர்ந்த விமானமாகும்.

''விபத்தில் மரணித்தவர்களில் மூவர் விமானிகளாவர். பயணிகளில் பெரும்பாலானோர் துருக்கியர்களாவர். பலியானோரில் சிலரின் உறவினர்கள், துருக்கியிலிருந்து, விசேட விமானமொன்றின் மூலம் ஆம்ஸ்ரர்டாம் விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்கள்'' என விமான நிலைய வட்டாரம் தெரிவித்தது.

''இஸ்தான்புல் அட்டாடேர்க் விமான நிலையத்திலிருந்து, புதன்கிழமை, காலை உள்ளூர் நேரப்படி 10.31 மணிக்குப் புறப்பட்ட இவ்விமானம், மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் ஆம்ஸ்ரர்டாமை வந்தடைந்தது. தரையிறங்க முற்பட்டபோது, ஓடுதரைக்கு அண்மையில் மோதுண்டு விபத்துக்குள்ளானது'' என்றும் அது குறிப்பிட்டது.

''போயிங் 737-800 என்னும் இவ்விமானம் விபத்துக்குள்ளானதும் மூன்று துண்டங்களாக உடைந்து விட்டது. பெரும்பாலான பயணிகள் அதிர்ஷ்ட வசமாகத் தப்பிவிட்டனர். எனினும், 84 பேர்வரை காயமடைந்துள்ளனர்'' என விமான நிலைய வட்டாரம் மேலும் விளக்கியது.

''இவ்விபத்தில் 25 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர். 6 பேர் ஆபத்தான கட்டத்தில் உள்ளனர். 24 பேர் சாதாரண காயங்களுக்குள்ளாகியுள்ளனர். 11 மருத்துவமனைகளில் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது'' என நெதர்லாந்து சுகாதார பெண் அதிகாரியொருவர், புதன்கிழமை, ஆம்ஸ்ரர்டாமில் செய்தியாளர் மாநாடொன்றில் விவரித்தார்.

''இவ்விமானத்தில் 78 துருக்கியப் பிரஜைகளும், 56 இதர நாட்டுப் பிரஜைகளும் பயணித்துள்ளார்கள்'' என துருக்கிய போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ''விமானப் பதிவுகள், இவ்விமானம் முறையாகப் பேணப்பட்டு வந்துள்ளமையைக் காட்டுகின்றன'' என துருக்கிய விமான சேவை இயக்குநர் சபைத் தலைவர் கென்டன் கார்லிட்டிகின், துருக்கியில் ஊடகவியலாளருக்குத் தெரிவித்துள்ளார்.

## சீனாவில் மூவர் தற்கொலை முயற்சி

பீஜிங் ,பெப். 27

சீன தலைநகர் பீஜிங்கின் மையத்துக்கருகில் கார் ஒன்றுக்குள் மூன்று பேர் தமக்குத் தாமே தீ மூட்டிக்கொண்டனர். எனினும், மூவரும் காப்பாற்றப்பட்டுவிட்டனர்.

''ஏதோ ஒரு பிரச்சினை தொடர்பாக் எதிர்ப்புத் தெரிவிக்க இம்மூவரும் தலைநகருக்கு வந்துள்ளனர். ஆனால், அந்தப் பிரச்சினை என்னவென்பதற்கான சமிக்ஞை எதுவும் தெரியவில்லை'' என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

''திபெத்தியர்கள் தமது புது வருடத்தை அனுஷ்டிக்கின்றனர். சீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வருடாந்த தேசிய காங்கிரஸுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வேளையில் இந்த தீக்குளிப்பு இடம் பெற்றுள்ளது'' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அண்மைக்காலமாக சிறு எண்ணிக்கையிலான மக்கள் பல்வேறு காரணங்கள் குறித்து பொதுக்கவனத்தை ஈர்ப்பதற்காக சீனாவில் தீக்குளிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத்தினருக்கு எதிராக காஷ்மீரில் பெரும் கலவரம்

ஸ்ரீநகர், பெப். 27

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் அண்மையில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு இராணுவத்தினரே காரணம் எனக் கூறி, பிரிவினைவாதிகள் புதன்கிழமையும் நேற்று வியாழக்கிழமையும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

கலவரக்காரர்களை பொலிஸார் கட்டுப்படுத்த முயன்றனர். அப்போது தீவிரவாதிகள் அவர்களுடன் மோதலில் ஈடுபட்டனர். இதனால், பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் மோதலைக் கட்டுப்படுத்தினர்.

இளைஞர்கள் கொல்லப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரிவினைவாதிகள் புதன் கிழமை பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தனர். இதையடுத்து, பாகத்-இ-பார் ஸல்லா, ராம்பக், நாதிபோரா, பாட்மேலு ஆகிய பகுதிகளில் பிரிவினைவாதிகள் திரளாகக் கூடினர். இந்நிலையில், அவர்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர்.

எனினும், அவர்கள் கலைந்து செல்லவில்லை. பொலிஸாரின் வலியுறுத்தலுக்கும் பிரிவினைவாதிகள் செவி சாய்க்கவில்லை. மாறாக பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்கி கலவரத்தில் ஈடுபட்டனர்.

இதனால், கலவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி நடத்தினர். அப்போதும் ஆங்காங்கே குழுவாகப் பிரிந்து ஓடி ஆக்ரோஷமாக பிரி வினைவாதிகள் கற்களை வீசினர்.

இதையடுத்து, வானை நோக்கிச் சுட்டு பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர். அதன் பின்னர்தான் கலகக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

பாதுகாப்புப் படையினருக்கும், பிரிவினைவாதிகளுக்குமிடையிலான இந்த மோதலில் உயிரிழப்பு ஏதும் நேரவில்லை. ஆனால், 5 பொலிஸார் உட்பட 15 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதலில் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதி முழுவதும் பதற்றம் நிலவுகிறது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கலவரத்தைத் தொடர்ந்து பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



அந்த வகையில், பள்ளத்தாக்கில் பதற்றம் நிறைந்த பகுதிகளில் மட்டுமல்லாது, அனைத்து பகுதிகளிலும் கூடுதல் பொலிஸாரை குவித்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். பாதுகாப்புப் பணியில் துணை இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நான்கு தினங்களுக்கு முன்னர் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதற்கு இராணுவத்தினர் தான் காரணம் என பிரிவினை வாதிகள் குற்றஞ் சாட்டினர். இதை இராணுவ வீரர்கள் மறுத்தனர்.

இதையடுத்து, இளைஞர்கள் கொல்லப்பட்டமை குறித்து, இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு இராணுவத்துறை உத்தரவிட்டது. இது குறித்த விசாரணைக்கு மாநில அரசும் உத்தரவிட்டது.

எனினும், இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளாத பிரிவினைவாதிகள் புதன்கிழமை பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து கலவரத்தில் ஈடுபட்டனர். அத்துடன் நேற்று வியாழக்கிழமையும் ஆட்சேப ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.




## ஆப்கானில் குண்டுத் தாக்குதல் இருவர் பலி; 5 படையினர் காயம்

காபூல்,பெப். 27

ஆப்கானிஸ்தான் கந்தகார் நகரில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில், இரு சிவிலியன்கள் பலியானார்கள். எட்டுப் பேர் காயமடைந்தனர். இவர்களில் ஐவர் இராணுவ வீரர்களாவர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தான் இராணுவ வாகன அணி ஒன்று நகரைக் கடந்து சென்றுக்கொண்டிருந்தபோது, அதனை இலக்கு வைத்து இக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், வாகன அணி சொற்ப சேதங்களுடன் தப்பி விட்டது என்றும் அது குறிப்பிட்டது.

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றில் இக்குண்டு பொருத்தி வைக்கப்பட்டு, வாகன அணி அண்மியதும் தன்னியக்கக் கருவிமூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்றும் அது விவரித்தது.

அதேவேளை ஹெல்மாந் மாநிலத்தில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே மூண்ட சண்டையில் 18 தீவிரவாதிகள் பலியானார்கள். இராணுவத் தரப்பில் இரு வீரர்கள் உயிரிழந்தார்கள் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

கஞ்சாச் செடிகளை அழித்துக்கொண்டிருந்த பொலிஸாருக்கு இந்த இராணுவம் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தது. அச்சமயம் தீவிரவாதிகள் இராணுவ வீரர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். இதையடுத்தே, இரு சாராருக்குமிடையே இச்சண்டை மூண்டது என்றும் அது விளக்கியது.


ஆப்கானின் உருஸ்கான் மாநிலத்திலும் தீவிரவாதிகளுக்கும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படைகளுக்குமிடையே சண்டை மூண்டது. இதில் 10 தீவிரவாதிகள் பலியானார்கள் என்றும் இவ்வட்டாரம் குறிப்பிட்டது.

# பங்களாதேஷில் கலவரத்தில் ஈடுபட்ட படையினருக்குப் பொது மன்னிப்பு

டாக்கா, பெப். 27

பங்களாதேஷில் கலவரத்தில் ஈடுபட்ட எல்லைக் காவற்படையினர், பிரதமர் ஷேக் ஹஸீனா அளித்த பொதுமன்னிப்புக்கிணங்க, நேற்று வியாழக்கிழமை சரணடைந்தனர். இக்கலவரத்தில் ஐம்பது பேர்வரை பலியாகியுள்ளனர். அநேகர் காயமடைந்துள்ளனர்.

தலைநகரான டாக்காவிலுள்ள எல்லைக் காவற் படைத் தலைமையகத்தில், புதன் கிழமை இக்கலவரம் மூண்டது. கலகக்காரர்கள் தம் அதிகாரிகளை சிறைபிடித்ததோடு, கலவரத்தில் ஈடுபட்டார்கள். சம்பளப் பிரச்சினையே இக்கிளர்ச்சிக்குக் காரணமெனத் தெரியவந்துள்ளது.



பிரதமர் ஷேக் ஹஸீனாவும், சிரேஷ்ட அமைச்சர்களும் புதன்கிழமை மாலை, கலவரத்தில் ஈடுபட்ட ரைபிள் படையைச் சேர்ந்த 14 அதிருப்தியாளர்களை, பிரதமர் செயலகத்தில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்கள். காவற்படைத் தலைமையகத்திலிருந்து, பலத்த பாதுகாப்புடன் இந்த அதிருப்தியாளர்கள் இங்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள்.

''பணயக் கைதிகளாகத் தங்களால் பிடிக்கப்பட்ட அதிகாரிகளை, படையினர் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை கீழே போட வேண்டும். அதேவேளை, எல்லோருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்'' என பிரதமர் இச்சந்திப்பில் தெரிவித்துக்கொண்டார்.

''எல்லைக் காவற்படையினரின் சம்பள விவகாரத்துக்கும் ஏனைய கோரிக்கைகளுக்கும் [illegible]'' என்றும் பிரதமர் இதில் உறுதியளித்தார்.

''பிரதமரின் பொது மன்னிப்பு அறிவித்தலை அடுத்து, கலகக்காரர் கள் தங்கள் துப்பாக்கிகளைக் கையளித்து விட்டு, சரணடைய ஆரம்பித்து விட்டார்கள்'' என உள்துறை அமைச்சர் ஷஹாரா கட்டுன், ஊடகவி யலாளர்களுக்குத் தெரிவித்தார்.

கலவரத்தின்போது, தாக்குதல்களுக்கு இலக்கான அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்களில், ஏறத்தாழ 50 பெண்களும், பிள்ளைகளும் தங்கள் விடுதிகளிலிருந்து வெளியேறியுள்ளார்கள்.

# பாக். முன்னாள் பிரதமரும், சகோதரரும் தேர்தலில் போட்டியிடத் தடை விதிப்பு

இஸ்லாமாபாத் பெப். 27

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும், அவரது சகோதரரும் பஞ்சாப் மாகாண முதல்வருமான ஷாபஸ் ஷெரீப்பும் தேர்தலில் போட்டியிட உச்ச நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

தேர்தலில் போட்டியிட இவர்கள் தாக்கல் செய்த மனுவை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இதையடுத்து, நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் தனது பஞ்சாப் மாகாண முதல்வர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், பாகிஸ்தான் அரசில் குழப்பமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த 1999 இல் அப்போதைய ஜனாதிபதி முஷாரப்பை விமானத்துடன் நாடு கடத்த முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து, அவர் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டது. அவர் நாடு கடத்தப்பட்டார்.

பின்னர் ஒரு வழியாக நாடு திரும்பினார். ஆனால், தேர்தலில் போட்டியிட விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவில்லை. இந்நிலையில், கடந்த ஆண்டு நடந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை அவரது கட்சி பெற்றது.

இத்தேர்தலில் மொத்தமுள்ள 270 தொகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட பெனாஸிர் [illegible] கணவர் அஷிப் அலி சர்தாரியின் [illegible] மக்கள் கட்சிக்கு 97 இடங்களும், ஷெரீப் கட்சிக்கு 71 இடங்களும் கிடைத்தன.

இவர்கள் இருவரும் இணைந்து ஜனாதிபதி முஷாரப்பை பதவியிலிருந்து நீக்க முயற்சித்தனர். அதற்கு முன்னரே, முஷாரப் தாமாகவே தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். ஷெரீப்பின் ஆதரவுடன் சர்தாரி ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இதை தொடர்ந்து தற்போதைய ஜனநாயக அரசு தன்னை மீண்டும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கும் என நவாஸ் ஷெரீப் கனவு கண்டு வந்தார்.

எனினும், இவரது கனவுக்கு பெரும் அடியாக வந்தது பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் புதிய தீர்ப்பு ஒன்று. அதில், நவாஸ் ஷெரீப்புக்கும் அவரது சகோதரரும், பஞ்சாப் மாநில முதல்வருமான ஷாபஸ் ஷெரீப்புக்கும் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஷாபஸ் தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஷெரீப்பின் வழக்கறிஞர் அக்ரம் ஷேக் கூறுகையில், ''உச்ச நீதிமன்றத்தில் தேர்தலில் போட்டியிடவேண்டும் என ஷெரீப் தாக்கல் செய்த மனு முன்பு தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது அதே நிலைமை அவரது தம்பிக்கும் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி சர்தாரியின் உத்தரவுப்படி இந்த சதித்திட்டம அரங்கேறியுள்ளது'' - என்றார்.

இதையடுத்து, சர்தாரி மற்றும் ஷெரீப் இடையே இருந்து வந்த மோதல் வெளியுலகுக்குத் தெரியவந்துள்ளது. இவ்விரு கட்சிகளுக்குமிடையே பிளவு விரிவடைந்துள்ளதை அடுத்து, பாகிஸ்தான் அரசியலில் மீண்டும் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் சுதந்திர உணர்வை யாராலும் அடக்கி ஒடுக்க முடியாது

## டில்லிப் பேரணியில் சரத்குமார் முழக்கம்

சென்னை, பெப். 27

இலங்கைப் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாகக் கருதி உலக நாடுகள் தலையிட்டு அரசியல் ரீதியாக நிரந்தரத் தீர்வு காண வேண்டும். ஈழத் தமிழரின் சுதந்திர உணர்வையும், சம உரிமை நாட்டத்தையும் யாராலும் அடக்கிவிட முடியாது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை ஒடுக்குவதிலேயே குறியாக உள்ளனர் - என்று இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, சமத்துவ மக்கள் கட்சி சார்பில் டில்லியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில் தமிழகக் கட்சிகள் இனியாவது ஒருமித்த குரலை எழுப்ப வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பூர்வீக குடிமக்கள். சிங்களர்களுக்குச் சமமாக தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

அவர்களது சுதந்திர உணர்வையும், சம உரிமை நாட்டத்தையும் யாராலும் அடக்கிவிட முடியாது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை ஒடுக்குவதிலேயே குறியாக உள்ளனர். இலங்கை அரசுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சு நடைபெற வேண்டும். விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு பேச்சை நடத்த முடியாது. எனவே இலங்கையிலும், இந்தியாவிலும் உடனடியாக புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாகக் கருதி உலக நாடுகள் தலையிட்டு அரசியல் ரீதியாக நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் சம உரிமைப் போராட்டம் வெற்றிபெற 10 கோடி தமிழர்களும் ஒரே உணர்வுடன் செயற்பட வேண்டும்

இதற்காக கையெழுத்து இயக்கம் நடத்தப்படவேண்டும். மத்திய, மாநில அரசுகள் இலங்கைப் பிரச்சினையில் கவனம் செலுத்தவில்லை. தமிழர்கள் நிம்மதியாக வாழ வழி செய்யும் வரை எங்கள் போராட்டம் ஓயாது - என்றார்.

டில்லி மேல்சபை பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர் திருநாவுக்கரசரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்.

அவர் பேசுகையில், தமிழகத்தில் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசை நிர்ப்பந்திக்க தி.மு.க. மறுத்து வருகிறது எனக் கூறினார்.



ஒஸ்கார் விருதுகளுடன் சென்னை திரும்பிய ஏ.ஆர்.ரஹ்மானை ட்ரம்ஸ் இசைக் கலைஞர் சிவமணி சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தபோது....

# ஏ.ஆர்.ரஹ்மானின் இசையமைப்பில் உலக தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்

## கவிஞர் வைரமுத்து எழுதுகிறார்



உலகத் தமிழர்களுக்காக, புதிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதப் போகிறேன். அந்தப் பாடலுக்கு இசையமைக்க ஏ.ஆர்.ரஹ்மான் சம்மதித்திருக்கிறார் - என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகாந்த் - நமீதா ஜோடியாக நடித்து விரைவில் திரைக்கு வரவிருக்கும் படம், 'இந்திர விழா'. இந்தப் படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள போர் பிரேம் திரையரங்கில் நடந்தது.

விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஒஸ்கார் விருது பெற்ற தமிழன் ஏ.ஆர்.ரகுமானை பாராட்டி, உலகமே எழுந்து நின்று கை தட்டுகிறது. இந்தியத் திரையுலகுக்கு தலைமை தாங்கும் தகுதி, தமிழ்த் திரையுலகுக்கு வந்திருக்கிறது. உலகத் திரையுலகுக்கு தலைமை தாங்கும் தகுதி, இந்திய திரையுலகுக்கு வந்திருக்கிறது.



உலகத் தமிழர்களுக்காக, புதிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதப் போகிறேன். அந்த பாடலுக்கு இசையமைக்க ஏ.ஆர்.ரகுமான் சம்மதித்திருக்கிறார்.

தமிழன் எடுக்கின்ற படத்துக்கு ஏன் ஒஸ்கார் விருது கிடைக்கவில்லை என்று கேட்கிறார்கள். இங்குள்ள கலைஞர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், உலக கலைஞர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர். வாய்ப்புக் கிடைத்தால் வெல்லும் தகுதி நம்மவர்களுக்கு இருக்கிறது. ஆங்கிலம் தெரிந்த தமிழ் இயக்குநர்கள், ஒஸ்கார் விருதுக்கான ஆங்கிலப் படங்களை எடுக்க வேண்டும் - என்றார்.

# இராமேஸ்வரம் மீனவர் மீது தாக்குதல் மூவர்காயம்; வலைகள், மீன்கள் நாசம்



நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன், மீனவர் மீது கம்பிகளால் தாக்கியதில் இருவர் காயமடைந்தனர் என தமிழக நாளேடுகள் தெரிவித்துள்ளன.

மேலும் இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு -

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குமீன்பிடிக்க சென்றனர். நண்பகல் ஒரு மணியளவில் அந்தப் படகுகள் நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தன. அப்போது அந்தப் பகுதிக்கு ஆயுதம் பொருத்திய 5 அதி நவீன கப்பல்களில் இலங்கைக் கடற்படையினர் ரோந்து வந்தனர். அவர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டவாறே மீனவர்களை திரும்பிச்சென்று விடுமாறு எச்சரித்தவாறு வந்தனர்.

இதையடுத்து பயந்துபோன மீனவர்கள் கடலில் வீசிய வலைகளை அவசர அவசரமாக எடுக்க முயன்றனர். ஆனாலும் இலங்கைக் கடற்படையினர் அவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த கான்ஸ் என்பவருக்கு சொந்தமான படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் சூசை அந்தோணி (வயது - 28) என்பவரின் வலது கையில் குண்டு பாய்ந்தது. துடிதுடித்த சூசை அந்தோணியை உடனிருந்த மீனவர்கள் கிருபை, சிலுவை, ஞானசேகரன் ஆகியோர் படகில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இராமேஸ்வரம் கொண்டுவந்தனர்.

மேலும் நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டு இருந்த அருள்பிரகாசம் என்பவருக்கு சொந்தமான படகில் உறைபனிக்கட்டி உடைப்பதற்காக போடப்பட்டிருந்த இரும்புக் கம்பியை எடுத்து படகு ஓட்டுநர் அருள்பிரகாசத்தின் மகன் ராஜாவை கண்மூடித்தனமாகத் தாக்கினர். அதோடு கடலில் மீன்பிடிக்க வீசி இருந்த வலைகளையும் வெட்டிவீசி, விலை உயர்ந்த இறால் மீன்கள், கைப்பேரிகளையும் பறித்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டனர். வலி தாங்க முடியாமல் துடித்த ராஜாவை மீனவர்கள் நிஷாந்த், முருகேசன் மற்றும் 3 பேரும் இராமேஸ்வரத்திற்கு அழைத்து வந்தனர்.

மேலும் சிங்கள கடற்படையினரின் தாக்குதலில் முருகன் என்பவரது படகில் இருந்த முத்துலிங்கம் என்பவரும் காயமடைந்தார்.

# இலங்கை மீது பொருளாதாரத் தடை: சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்!

## திராவிடர் கழகம் வலியுறுத்து

சென்னை, பெப். 27



இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் - என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

போரை நிறுத்தக் கோரி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கி-மூன் விடுத்த கோரிக்கைகளை இலங்கை அரசு நிராகரித்து விட்டது.

போர் நிறுத்தம் செய்யத் தயார் என விடுதலைப் புலிகள் அறிவித்த பிறகும், அதை ஏற்க இலங்கை அரசு மறுத்து விட்டது. புலிகள் முன் வந்த பிறகும் போரை நிறுத்த முடியாது எனக் கூறும் இலங்கை அரசு மீது சர்வதேச நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

இலங்கையில் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்த ஐ.நா. உரிமை விவகாரங்களுக்கான துணைப் பொதுச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ், வவுனியா பகுதியில் இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ள பாதுகாப்புப் பகுதிகளைப் பார்வையிட்டார். அங்கு அகதிகளாக வாழும் அப்பாவித் தமிழர்களின் நிலைமை கவலையளிப்பதாக இருக்கிறது. அவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் விரைவாக மேற்கொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

இதன்மூலம் அகதிகளாக அடக்கப்பட்டுள்ள மக்களுக்குக்கூட தேவையான உதவிகளை, வசதிகளை இலங்கை அரசு செய்யவில்லை என்பது விளங்கவில்லையா?

விடுதலைப் புலிகள்தான் மக்களை மனிதக் கேடயங்களாக்கி வெளியேற அனுமதிக்காமல் தடுக்கிறார்கள் என்ற ஒரு திட்டமிட்ட பொய்ப் பிரசாரத்தை இலங்கை அரசு உலகம் முழுவதும் செய்கின்றது.

சர்வதேசப் பார்வையாளர்கள் முன்னிலையில் தமிழர்களை ஒப்படைக்கத் தயார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் என வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளாரே. தமிழர்களைக் கேடயமாக விடுதலைப்புலிகள் வைத்திருந்தால் இப்படிக் கூற முன்வருவார்களா ? - என்றுள்ளது.

# 'நாம் தமிழர் நடைப்பயணம்' மார்ச் 4, 5இற்கு தள்ளிவைப்பு; திருமாவளவன் அறிவிப்பு

சென்னை, பெப். 27



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மார்ச் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த ''நாம் தமிழர்'' நடைப்பயணம் மார்ச் 4, 5ஆம் திகதிகளில் நடைபெறும் என அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவது குறித்து இங்குள்ள தமிழர்களிடம் விளக்குவதற்காக நடைபெறும் இந்தப் பயணத்தில் காஞ்சிபுரத்தில், தான் பங்கேற்க இருக்கிறார் என சென்னையில் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு ராடர் வழங்கியது எதற்கு? பேரவையில் காங் - கம்யூ. கடும் வாதம்

சென்னை, பெப். 27

இலங்கை இராணுவத்துக்கு ராடர் கருவி வழங்கியது ஏன் என்பது தொடர்பாக, கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையே சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை வாக்கு வாதம் ஏற்பட்டது.

சட்டப் பேரவையில் வரவு - செலவுத் திட்டம் குறித்த பொது விவாதத்தின்போது புதன் கிழமை நடைபெற்ற வாக்குவாதம் வருமாறு-

பீட்டர் அல்போன்ஸ் (காங். கொறடா) -

காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, மோசடி பேர்வழிகள் என்கிறார்கள். எங்களின் பெருமைகளை அடக்கமாகக் கூறியே பழக்கப்பட்டவர்கள் நாங்கள். அதனால்தான் அதிகாரத்தைச் சுமக்க முடியாமல் தள்ளி நிற்கிறோம். இலங்கைப் பிரச்சினையில் போர் நிறுத்தம் வேண்டுமென்று மத்திய அரசு தெளிவாகக் கூறியிருக்கிறது. எந்த ஆயுதங்களையோ, இராணுவத் தளபாடங்களையோ இலங்கை அரசுக்கு வழங்கவில்லை என நாடாளுமன்றத்தில் அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

சிவபுண்ணியம் (கம்யூனிஸ்ட்)-

ஆயுதங்கள் வழங்கவில்லை எனச் சொன்னால், ராடர் கருவிகள் வழங்கப்பட்டிருப்பது உண்மையா? இல்லையா?

பீட்டர் அல்போன்ஸ் (காங்.) -

எதற்காக அந்தக் கருவி வழங்கப்பட்டது என்பதை பேரவையில் சொல்வது பாதுகாப்புக்கு உகந்ததாக இருக்காது.

அவை முன்னவர் அன்பழகன் -

கொடுக்கப்பட்ட அந்தக் கருவி, இலங்கை இராணுவத்துக்குக் கொடுக்கப்படவில்லை. அப்பாவி மக்களைக் கொல்வதற்கு அளிக்கப்படவில்லை.

பீட்டர் அல்போன்ஸ் (காங்.) -

இலங்கை முனையிலிருந்து, இந்தியக் கடற்கரையைப் பார்க்கும் வகையில் அந்த ராடர் கருவி வழங்கப்பட்டது. அதற்கும், இலங்கையின் வடக்குப் பகுதியில் வாழும் தமிழர்களுக்கும் தொடர்பில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தவேண்டாம்.

# ஈழத்தமிழ் உறவுகளைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றுதிரள வேண்டும்!

## இதுவே கருணாநிதியின் விருப்பம் என்கிறார் அன்பழகன்

சென்னை, பெப்.27

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இங்குள்ள அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட வேண்டும் என்பதே முதல்வர் கருணாநிதியின் வேண்டுகோள் - என்று சட்டசபையில் அமைச்சர் அன்பழகன் தெரிவித்துளர்.

தமிழக சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் அன்பழகன் நேற்று பேசியபோதே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிட முடியாது. பக்கத்து நாடாக இருப்பதால் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கப்படும்.

டென்மார்க், நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகள் தலையிட்டால் உள்நோக்கம் கற்பிக்க வாய்ப்பில்லை.

எனவே, உலகநாடுகள் சேர்ந்து, இலங்கையில் தமிழினம் அழிக்கப்படுவதைத் தடுக்க [illegible] மத்திய அரசு மேலும் முயற்சிக்க வேண்டுமென்று இந்த அரசின் மூலம் வலியுறுத்துகிறேன்.

மருத்துவமனையில் இருந்தாலும் முதல்வர் கலைஞர், சட்டத்தரணிகள் - பொலிஸார் மோதல், இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பன குறித்து மிகவும் கவலைப்பட்டு வருகிறார்.

இலங்கைத் தமிழர் மீது தி.மு.கவுக்கு எப்போதும் அக்கறை உண்டு. ஈழத்தமிழர்களை காப்பாற்ற இங்குள்ள தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

உயிர்போகும் நிலையில் ஈழத்தமிழர் உயர்த்தும் குரல், நம் மாறுபட்ட குரல் ஒலிக்குமானால், அந்தச் சத்தத்தை இந்தச் சத்தம் அழித்துவிடும்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதில் சட்டத்தரணிகள் அணி வேறு, அரசியல் கட்சிகள் அணி வேறு என்று இல்லை என்று முதல்வர் கலைஞர், இந்த அவையின் மூலமாக நாட்டுக்குத் தெரிவிக்க கேட்டுக் கொண்டிருக்கிறார் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் ஆசிரியரின் கைது குறித்து பல்வேறு தரப்புகளும் கடும் கண்டனம்

கொழும்பு, பெப். 27

'உதயன்' பத்திரிகையின் ஆசிரியரும் 'சுடர்ஒளி' பத்திரிக்கையின் பிரதம ஆசிரியருமான நடேசபிள்ளை வித்தியாதரன் கல் கிஸையில் வைத்து நேற்றுக் கடத்தப்பட்ட சம்பவத்தை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக அமைப்புகளும் அரசியல் கட்சித் தலைவர்களும் கடுமையாக கண்டித்து அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கைகளின் விவரம் வருமாறு:-

### இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

'சுடர் ஒளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.வித்தியாதரன் நேற்று வியாழக்கிழமை காலை கல்கிஸையிலுள்ள மலர்ச்சாலை ஒன்றில் வைத்து பொலிஸ் மற்றும் சிவில் உடையில் வந்த சிலரால் பலவந்தமாக வெள்ளை வானில் ஏற்றி கூட்டிச் சென்ற முறை குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அது அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

விசாரணைகளின் பொருட்டு பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தேவைப்படும் பட்சத்திலோ அன்றேல் எந்தவொரு பிரஜையோ எதற்காக அவர் கைதுசெய்யப்படுகின்றார் என்று கூறப்படுவதுடன், அவரைக் கைது செய்யும் முன் நீதிமன்ற அனுமதியைக் காட்டி அமைதியான முறையில் கைது செய்து அழைத்துச் செல்ல முடியும். எனினும், இங்கு கடைப்பிடிக்கப்பட்டவை மிகவும் வருத்தத்திற்குரியன.

வித்தியாதரன் அழைத்துச் செல்லப்பட்டமை சரியான காரணத்திற்காகவா, அன்றேல் அவ்வாறு இல்லாமலா என்பது குறித்து எமக்குத் தெரியாது. அது தொடர்பான பூரண அறிவின்றி நாம் விமர்சிக்க முடியாது. எனினும், உண்மை யாதெனில் பொலிஸ் பேச்சாளர் முதலில் ஊடகங்களுக்குக் கருத்துத் வெளியிடுகையில், அவர் ஆயுதபாணிகளின் குழுவொன்றினால் வெள்ளை வானில் கடத்தப்பட்டார் எனத் தெரிவித்தார். எனினும், சிறிது நேரத்தில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் அவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனக்கூறப்பட்டது. இதிலிருந்து இடதுகை செய்வதை வலதுகை அறியாத நிலையில் பொலிஸார் உள்ளனரா? என்ற தோற்றப்பாட்டைக் காட்டுகிறது.

கண்ணால் கண்ட காட்சிகளின்படி குறித்த மலர்ச்சாலையில் 'சுடர் ஒளி' பிரதம ஆசிரியர் வித்தியாதரன், பத்திரிகை வெளியீட்டாளர் சகிதம் அவரது உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் ஈடுபட்டிருந்த சமயம் பொலிஸ் சீருடையில் வந்த மூவர் குறித்த பிரதம ஆசிரியரை அங்கிருந்து கூட்டிச் செல்ல முயன்றுள்ளனர். அதனைத் தடுக்க முற்பட்ட வேளை, சிவில் உடையிலிருந்த மேலும் மூவர் வித்தியாதரனை பலவந்தமாக வெள்ளை வானில் தூக்கிப் போட்டுச் சென்றுள்ளனர். இந்த விதமாக ஒருவரைக் கைதுசெய்வதையும், அதன் பொருட்டு வெள்ளை வானைப் பயன்படுத்துவதையும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வெகுவாகக் கண்டிக்கின்றது. இது மிகவும் கவலைக்குரியதாகும் - என்றுள்ளது.

### எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு

'உதயன்'பத்திரிகையின் ஆசிரியரும் 'சுடர்ஒளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான என்.வித்தியாதரனின் கைது குறித்து எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரியர் பிடியாணை இல்லாமல் கைதுசெய்யப்பட்டிருக்கின்றமை சட்டத்தின் ஆட்சியை மீறும் செயல்.

அவரை காலதாமதமின்றி பொலிஸார் விடுதலை செய்யவேண்டும். எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு ஊடகத்துறை அமைச்சரிடம் தொடர்புகொண்டு வித்தியாதரனின் பாதுகாப்புக் குறித்து உறுதி கோரியுள்ளது.

இது குறித்து ஊடகத்துறை அமைச்சரிடம் தொடர்புகொண்டபோது-

வித்தியாதரனிடம் தற்போது விசாரணை நடைபெறுகிறது எனவும், அவரின் உறவினர்களுக்குப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும், அவர் தற்போது நன்றாக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கைது குறித்து 'சுடர் ஒளி'யின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.சரவணபவனிடம் எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு தொடர்புகொண்டபோது,

வித்தியாதரன் பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை நாங்கள் கண்களால் காணும் வரை அவர் கடத்தப்பட்டார் என்றே கருதுவோம் என்று கூறினார்-என்றுள்ளது.

### பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன்

வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் கவலையும் கண்டனமும் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

"ஊடகத்துறையினரின் உரிமைகளையும் தனித்துவத்தையும் அவதூறு செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் கடத்தல்களை உடன் நிறுத்துவதற்கு அரசும் ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களின் தகவலறியும் யதார்த்தத்திற்கு எவரும் தடைபோட முடியாது. ஊடகத்துறையினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் 'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் கடத்தப்பட்டுள்ளமை அமைந்துள்ளது.

நேற்றுக்காலை கல்கிஸை மலர்ச்சாலையின் முன்னால் வைத்து மூன்று சீருடை அணிந்தவர்களுடன் வந்த மூன்று சிவில் உடைதாரிகள் பத்திரிகையாளர் வித்தியாதரனை வெள்ளை வானில் கடத்திச் சென்றுள்ளமை விசனத்துக்குரியதாகும்.

இக்கடத்தல் தொடர்பாக ஜனாதிபதிக்கும், அமைச்சர் ராஜித சேனாரட்ணவுக்கும் அறிவித்ததோடு, அவரை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளேன்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் கல்கிஸை மலர்ச்சாலையில் உறவினர் ஒருவரது இறுதிச்சடங்கில் கலந்துகொண்டிருந்த சமயமே வித்தியாதரன் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஊடகத்துறையினரையும் மதித்து, கௌரவித்துக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையாகும்.

பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் கடத்தப்படுவதும் சர்வ சாதாரணமாக இடம்பெறுவது பெரும் அச்சுறுத்தலையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் தமிழ் பத்திரிகையாளரான வித்தியாதரன் அநாகரிகமான முறையில் சீருடையணிந்தவர்களால் கடத்தப்பட்டிருப்பது வேதனை அளிக்கின்றது.

இப்படியான சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

### மனோகணேசன் எம்.பி.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'சுடர்ஒளி' பிரதம ஆசிரியர் வித்தியாதரனை பகிரங்கமாக பலர் கூடும் இடத்திலிருந்து ஆயுத முனையில் பலாத்காரமாகக் கடத்திவிட்டு அதை பிற்பாடு கைது நடவடிக்கை என வர்ணிப்பது வெட்கங்கெட்ட செயலாகும்.

இலங்கையின் நற்பெயரை மனித உரிமைப் போராளிகள் கெடுப்பதாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அநியாயமாக கூறிவரும் அமைச்சரவையின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெலவும், அவரது அரசும் நம் நாட்டுக்கு அபகீர்த்தியை கொண்டு வருவது பாதுகாப்புத் துறையின் இத்தகைய சட்டவிரோதமான மனித உரிமை மீறல்களாகும் என்பதை இனியாவது ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

கொழும்பு நகரில் கடந்த மூன்று வருடங்களாக பலவந்தமாகக் கடத்தப்பட்டு, காணாமல் போன சுமார் 450 தமிழர்களை கடத்தியிருப்பது அரசுதான் என்பது இந்த சம்பவம் மூலம் திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனது தலைநகர மாவட்டத்தில் பகிரங்கமாக மக்கள் கூடும் ஒரு மரணச் சடங்கு நிகழ்விலிருந்து பிரபலமான பத்திரிகை ஆசிரியர் ஒருவர் ஆயுத முனையில் கடத்திச் செல்லப்படும்பொழுது அது குறித்து சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பான பொலிஸ் துறையிடம் முறையிடுவதைத் தவிர்த்து இவ்விடயத்தை கொழும்பில் உள்ள சர்வதேச தூதுவர்களிடம் முறையிடும் நிலைமை ஏற்பட்டுள்ளதை நினைத்து இந்த கொழும்பு மாவட்டத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், இந்நாட்டின் குடிமகன் என்ற முறையிலும் வெட்கித் தலைகுனிகின்றேன்.

சீருடை அணியாமல் அல்லது அரைகுறை சீருடையில், அடையாளம் தெரியாத அதிகாரபூர்வமற்ற வாகனங்களில் வந்து, ஆயுத முனையில் தமிழர்களை நாய் பிடிப்பதைப் போல் பிடித்து வாகனத்தில் கடத்திச் செல்லும் செயற்பாட்டைதான் அன்று முதல் இன்று வரை நாங்கள் கடத்தல் என்று சொல்கின்றோம்.

சீருடையில் வந்து தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு ஒரு நபரை சட்டப்படி கைது செய்து அதிகாரபூர்வமான வாகனத்தில் கொண்டு சென்று சட்டப்பூர்வமான இடத்தில் வைத்து விசாரிப்பது சட்டப்பூர்வ கைது நடவடிக்கை ஆகும்.

விசேட பொலிஸ் குழுவினர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்குச் சென்று எவரையாவது கைது செய்வார்களேயானால், அது குறிப்பிட்ட பிரதேச பொலிஸிற்கு அறிவிக்கப்படவேண்டும். சட்டமும், ஒழுங்கும் நிலவும் சமூகத்தில் இவை அடிப்படை விதிகளாகும். இதை நாம் எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் இந்த பொலிஸ் மா அதிபர் தம்மை திருத்திக்கொள்ள வில்லை. இது இவர்களுக்கு விளங்கவில்லை என்று சொல்லமுடியாது.

பாதிக்கப்படுவது அப்பாவித் தமிழர்கள் அல்லது தமிழ் முஸ்லிம்கள் என்ற காரணத்தினாலேயே தம்மை மாற்றிக்கொள்வதற்கு இந்த அரசும் அதன் பொலிஸும் தயாராக இல்லை என்பதே இதன் அர்த்தமாகும் - என்றுள்ளது.

### ஐந்து ஊடக அமைப்புகள் கூட்டாகக் கண்டனம்

'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளின் ஆசிரியர் ந.வித்தியாதரன் நேற்று ஆயுதம் தாங்கிய குழுவினரால் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டமை குறித்து சுதந்திர ஊடக இயக்கம்,உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியாலளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், உழைக்கும் ஊடகதொழில் சங்கங்களின் சம்மேளனம் ஆகிய ஊடக அமைப்புகள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன.

இது குறித்து அதில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வித்தியாதரன் தம்து உறவினரொருவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக கல்கிஸையிலுள்ள மலர்ச்சாலை ஒன்றுக்குச் சென்றிருந்த போதே இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது இலங்கையின் ஊடகவியலாளர்களுக்குள்ள உயிராபத்து வரிசையில் மிக மோசமான நிகழ்வாகும். வித்தியாதரனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி எமது ஊடகஅமைப்புகள் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொள்கின்றன.

தமது அலுவலக சகாக்கள் உட்பட பெருந்தொகையானோர் முன்னிலையில் வித்தியாதரன் இவ்வாறு கடத்தப்பட்டது தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். அவர் சிறிது நேரத்துக்குப் பின்னர் எம்முடன் தொடர்புகொண்டு விசாரணைக்காகவே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

இதற்கு சில தினங்களுக்கு முன்னரும் அவரது பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று தொடர்பாக இரகசியப் பொலிஸார் வித்தியாதரனை விசாரணைக்குட்படுத்தினர். ஏதாவது ஒரு காரணத்திற்காக உரிய முறையில் கைது செய்யும் தேவை இருந்தாலும் இவ்வாறு பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டிருப்பது சட்டவிரோதமானதாகும்.

கடந்த இரண்டு மாதகாலத்துக்குள் இலங்கையின் முக்கிய பத்திரிகையின் ஆசிரியரொருவர் படுகொலை செய்யப்பட்டார். மற்றுமொரு பத்திரிகை ஆசிரியர் படுமோசமாகத் தாக்கப்பட்டார். இலத்திரனியுல் ஊடகமொன்று தீயிட்டு எரிக்கப்பட்டது. இருந்தும் இவை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுமில்லை. இந்த சூழ்நிலையின் கீழ் ஊடகவியலாளருக்கு எதிரான இதுபோன்ற மோசமான வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றதென்பதை குறிப்பிடவேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியின்கீழ் அரச அதிகாரியிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் நாம் மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், வித்தியாதரன் மீது குற்றச்சாட்டுகள் இருப்பின் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி சம்பந்தப்பட்ட விசாரணைகளை மேற்கொள்ள எதுவித தடைகளும் இல்லாத நிலையில் இவ்வாறு பலாத்காரமாகக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

# மேல் மாகாண சபைக்கு ஏப்ரல் 25 இல் தேர்தல்

## 102 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 38 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, பெப்ரவரி 27

மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இச்சபைக்கான தேர்தல் இடம்பெறுவதோடு, இத்தேர்தலில் 102 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு சுமார் 38 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் நேற்று கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வேட்புமனுக் களைத் தாக்கல் செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அக்கட்சியின் கொழும்பு மாவட்ட அணித் தலைவர் லக்ஷ்மன் அபயவர்த்தன தலைமையில் கொழும்பு மாவட்டத்திலும், களுத்துறை மாவட்ட அணித் தலைவர் கித்சிறி கஹடபிட்டியவின் தலைமையில் களுத்துறை மாவட்டத்திலும், கம்பஹா மாவட்ட அணித் தலைவர் லோரன்ஸ் மாதிவலவின் தலைமையில் கம்பஹா மாவட்டத்திலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஆறு முஸ்லிம்களும், ஆறு தமிழர்களும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. அக்கட்சியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் பிரசன்ன ரணதுங்கவும், கொழும்பு மாவட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேவும் முதலமைச்சர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இருப்பினும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் முதலமைச்சர் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.

ஜே.வி.பியின் சார்பில் அக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் வருண ராஜபக்ஷவின் தலைமையில் கம்பஹா மாவட்டத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தலைமையில் கொழும்பு மாவட்டத்திலும், அக்கட்சியின் களுத்துறை மாவட்ட அணித்தலைவர் நளிந்த ஜயந்த தலைமையில் களுத்துறை மாவட்டத்திலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஜே.வி.பியின் கொழும்பு மாவட்ட அணித் தலைவராக துமிந்த நாகமுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜே.வி.பி. அடுத்த மாதம் 5 ஆம் திகதி மஹரகமவில் அதன் முதலாவது பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றது.

இந்த மாகாண சபைத் தேர்தலில் மூன்று மாவட்டங்களிலும் இருந்து 102 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து 15 இலட்சத்து 60 ஆயிரத்து 593 பேரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 14 லட்சத்து 58 ஆயிரத்து 293 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 8 லட்சத்து ஆயிரத்து 326 பேரும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் ஒருபோதும் நிறுத்தப் படமாட்டாது.

தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளின் மூலமே நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக வடக்கில் பயங்கரவாதிகளின் பிடியிலுள்ள பிரதேசங்களைக் மீட்கும் நடவடிக்கைகள் படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இந்நிலையில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்கும் வரையில் பயங்கரவாதத்தை அழிக்கும் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் இருக்காது. விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அவர்கள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத் திக் கொண்டு மீண்டும் உயிர்ப்புப்பெற முயற்சிக்கின்றனர்.

உணவு மருந்துப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு உயிர்தப்புவதற்காக விடுதலைப் புலிகள் பொதுமக்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது கூட படையினர் விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றை நடத்துவதில்லை. (அ-சி)

## உண்மைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இந்த விசாரணையானது, ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற வகையிலும் ஜன்நாயக கட்சியொன்றின் தலைவர் என்ற அடிப்படையிலும் எனது சுதந்திரமான சிந்தனைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தலையீடாக அமைவதாகவே நான் கருதுகினறேன்.

தமிழ் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெயர்ந்துள்ள மக்களைப் போர் நடக்கும் பகுதிகளிலோ அல்லது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலோ சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள். அரச ஊடகங்களில் குறிப்பிட்ட பத்திரிகையாளர் மாநாடு விமர்சிக்கப்பட்டமை, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என்னை விசாரித்தமை, உண்மைகளை அடக்குகின்ற ஒரு நோக்கத்துடன், எனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விரோதமான ஒரு முயற்சியாகவே நான் கருத வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எனக்கு தெரியாது. இந்நிலையில் இதனைத் தங்களுக்கு அறிவிப்பது எனது கடமை என்று நான் நினைக்கின்றேன். எனவே, தாங்கள் அரசில் உள்ள சிலரால் மேற் கொள்ளப்படும் சீரற்ற நடைமுறைகள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.''

இவ்வாறு அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளரார்.

கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் மாநாட்டில் வன்னி நிலவரம் குறித்து அவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே இரா.சம்பந்தன் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். (அ-சி)

## கடற் புலிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் கைப்பற்றப்பட்டது. இம் முகாமுக்கு கடற்புலிகளின் தளபதி சூசை அடிக்கடி வந்து போவதாகவும், இங்கிருந்து படகு எஞ்ஜின்கள் பலவற்றையும், ஆயுதங்களையும் குண்டு தயாரிக்கும் நிலையம் ஒன்றையும் இராணுவத்தினர் கைப் பற்றியதாகவும் இராணுவப் பேச்சாளர் சொன்னார் (அ-06)

## குடிப்பதற்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி மேலும் இடம்பெயர்கின்றனர்.

உண்பதற்கு ஏதாவது உள்ளதா எனத் தேடுகின்றனர். புதுமாத்தளனில் போதிய குடிதண்ணீர் இல்லாததால் தண்ணீரைத் தேடி மக்கள் நீண்டதூரம் செல்கின்றனர்.

போதிய சுத்தமான நீர் இல்லாததே பாரிய மனிதாபிமான கவலையாகவுள்ளது. கரையோரப் பகுதியில் பொதுமக்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

மோதல் தொடர்வதால் இடம்பெயரும் மக்களுக்கான இடம் குறுகி வருகின்றது. புதுமாத்தளனைச் சுற்றியுள்ள பகுதி தற்போது பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது.

மக்கள் பதுங்குகுழிகளை அமைத்து அவற்றுக்குள் பல மணி நேரம் தங்குகின்றனர்.

மரபுவழி மருத்துவ நிலையங்கள் எவையும் இயங்கவில்லை. ஒரு சில தற்காலிக வைத்தியசாலைகள் மாத்திரம் உள்ளன. காயமடைந்தவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் நாளாந்தம் புதுமாத்தளன் நோக்கி வருகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கர்ப்பிணித்தாய்மார்கள் எங்கு பிரசவிக்க முடியுமோ அங்கு பிரசவிக்கின்றனர்.

மருந்துப் பொருள்கள் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகவுள்ளது. அங்குள்ள ஒரு சில மருத்துவப் பணியாளர்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்கின்றனர்.

## வித்தியாதரனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

வித்தியாதரன் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் எய்டன் வைட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் பணிபுரியும் அனைத்துப் பத்திரிகையாளர்களினதும் பாதுகாப்பு மிகப்பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என மேலும் தெரிவித்துள்ள அவர், சகல சர்வதேச ஊடக சுதந்திர அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளை வித்தியாதரனின் பாதுகாப்புக் குறித்து அறிவதற்கான உடனடி நடவடிக்கைகளில் இறங்குமாறும் கோரியுள்ளார்.

இதேவேளை -

ஆசிரியர் வித்தியாதரனின் கைது தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட உள்நாட்டு ஊடக அமைப்புகளும் சர்வதேச பத்திரிகை சம்மேளனங்களும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

(15 ஆம் பக்கமும் பார்க்க)

## 'உதயன்' ஆசிரிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்றவர்களை அவர்கள் கீழே தள்ளி விழுத்திவிட்டு வானில் வேகமாகச் சென்றுவிட்டனர். இதன்போது நிர்வாக இயக்குநரும் வேறு சிலரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

'வெள்ளை வான் கடத்தல்' பாணியில், பலாத்காரமாக மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவம் குறித்து அரசியல் உயர் வட்டாரங்களுக்கும் ஊடக அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கல்கிஸை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது ஒரு கடத்தல் சம்பவம் என்றே முதலில் பலதரப்பிலும் இருந்து செய்திகள் வெளியாகின. கல்கிஸைப் பொலிஸார், இச்சம்பவம் குறித்து அங்கு முறைப்பாடு செய்யச் சென்றவர்களின் வாகனத்தில் தாமும் ஏறி, ரத்மலானை, பொரலஸ்கமுவ பகுதிகளுக்குச் சென்று குறித்த வெள்ளை வான் அந்தப் பகுதிகள் ஊடாகச் சென்றதா என்று ஆங்காங்கே இருந்த சோதனைச் சாவடிகளில் விசாரித்தனர். பின்னர் அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

**கைது செய்யப்பட்டதாக பின்னர் அறிவிப்பு**

ஆனால் இந்த அமளிதுமளிகளுக்கு மத்தியில் - சிறிது நேரத்தின் பின்னர் - வித்தியாதரன் பொலிஸாரால் விசாரணைகளுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நேரத்தில் கொழும்பில் விடுதலைப் புலிகள் விமானங்கள் மூலம் தற்கொலைத் தாக்குதல் நடத்திய வேளையில் வித்தியாதரன் தமது கைத் தொலைபேசி மூலம் உரையாடியமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பதனாலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்லவும் தெரிவித்தனர்.

''கொழும்பில் புலிகள் விமானத் தாக்குதல் நடத்திய சந்தர்ப்பத்தில் வித்தியாதரனின் தொலைபேசிக்கு வழமைக்கு மாறாக கூடுதலான அழைப்புக்கள் வந்துள்ளன. இதனடிப்படையில் ஏற்பட்ட சந்தேகத்தின் பேரிலேயே விசாரணைக்காக அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

''கைது செய்யப்படும் போது இவர் ஓர் ஊடகவியலாளர் என்றோ பத்திரிகையின் ஆசிரியர் என்றோ பொலிஸார் அறிந்திருக்கவும் இல்லை. இவர் நிரபராதியாக இருந்தால் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்படுவார். குற்றவாளியாக இருந்தால் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்'' என்று ஊடக அமைச்சர் யாப்பா கூறினார்.

இதேவேளை -

ஆசிரியர் வித்தியாதரன் தெமட்டக்கொடையில் உள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் உறவினர்களுக்கு அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து அவரது மனைவி, பிள்ளைகள் அவரைப் பார்க்கவும் பொலிஸார் அனுமதி வழங்கினர்.

அதன் பிரகாரம் அவர்கள் நேற்று மாலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வித்தியாதரனைப் பார்வையிட்டு நலம் விசாரித்தனர் அவருக்கு உணவு மற்றும் மருந்து வகைகளையும் வழங்க பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர். (அ-1-சி)

## இலங்கை விவகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான விளக்கும் செய்தியாளர் மாநாடு நடத்தத் தேவையில்லை என்று அந்நாட்டுக்குச் சென்று திரும்பிய ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக் கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் மூன்று தினங்களுக்கு முன்னர் என்னிடம் தெரிவித்திருந்தார்- ரஸலிடம் கூறியிருந்தார்.

எனினும் இன்று வெள்ளிக்கிழமை செய்தியாளர் மாநாடு நடைபெறும் என்று பாதுகாப்புக் கவுன்ஸிலின் ஐந்து நாடுகளில் ஒன்றின் பிரதிநிதி நேற்றுக்காலை தமக்குத் தெரி வித்ததாக மத்தியூஸ் ரஸல் தெரிவித்துள்ளார்.

தமக்கு தகவல் தெரிவித்த பாதுகாப்புச் சபை உறுப்பு நாட்டின் பிரதிநிதி, இது விடயம் சம்பந்தமாக இலங்கைக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சமாதானத்தைக் கட்டி எழுப்புவதுகுறித்து கிரேக்கத்தின் வெளியுறவு அமைச்சர் செய்தியாளருக்கு விவரித்தபின்னர் ' வேறு விடயங்கள்' என்ற தலைப்பின் இலங்கை விவகாரம் குறித்து செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

TRINITY COLLEGE & UNIVERSITY COORDINATING OFFICE MANIPAY

B.Sc in (Computer Science)

பட்டப்படிப்புக்கள் 28/02/2009 அன்று புதிய பிரிவுகள் (Batch - 01) ஆரம்பமாகின்றன.

இதுவரை எமது நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் நாளையதினம் வருகை தந்து உங்கள் பட்டப் படிப்பினை தொடர முடியும்.

எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் M.Sc in IT பட்டப்படிப்பினை UK,USA,CANADA,INDIA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்து இலகுவாக Visa அனுமதி பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் தற்போது Association of computer Professional (U.K) சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும்.

UNI TECHNOLOGY Degree Division MANIPAY T.P :- 060 - 221 - 6433

தகவல் தொழில் நுட்பத்தில் நிங்களும் BIT

விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம் Bachelor of Information Technology External Degree Programme University of Colombo School of Computing

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது (A/L)எத்துறை சார் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் MCS, 324, Palaly Road, Jaffna.

Supported by UNDP/JRRP

SHAMROCK சச்சமோட்டை, யாழ்.

A/L 2011
* கிறிஸ்தவம் Miss.U.L.Mary B.A (Chr Spl.) Sat, Sun 5 p.m.

A/L 2009 & DAY
* B.St - B.S. புதில் Wed, Fri 6.15 a.m.
PAPER
* Acc - S. தவா Tue, Thu 4 a.m.
* Econ - N.B. கஜீதரன் Mon, Fri 3 p.m.

பொது உளச்சார்பு (Aptitude) வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

பிரிவு I சனி,ஞாயிறு 3.30 - 5.00
பிரிவு II திங்கள், செவ்வாய் 11.30 - 1.00
* தமிழ், ஆங்கில மொழிகளில் வகுப்புக்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

## மரண அறிவித்தல்

### திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி (சின்னமணி)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி நேற்று (26.02.2009)வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அருள்நிதி வாசா',
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
சு. திவாகரமூர்த்தி (கணவர்),
பிள்ளைகள்.

Dialog TELEKOM

''டயலொக் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்காக நடத்தும் விசேட சலுகை வழங்கல் வாரம்''

யாழ். குடாநாட்டில் டயலொக் வலையமைப்பு விஸ்திகரிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

விரையுங்கள், மீண்டும் இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்காது.
★ ரூ.600/= ரீலோடுடன் கூடிய இலவச சிம்.
★ இணைப்பு உங்களது பெயரிலேயே பதிவு செய்யப்படும்.
★ இச்சலுகையை பெற்றுக்கொள்ள இன்றே கீழ்க்குறிப்பிட்ட நிலையங்களை நாடுங்கள்.

★ இலவச சிம் ★ ரூ.600/= ரீலோட் ★ வர்ணத்திரை கையடக்கத் தொலைபேசி ★ IDD காட் 10% விலைக் கழிவுடன்..... ரூ.2790/=

PC SYSTEMS ஆலடிச் சந்தி, மானிப்பாய்.
K.K.போன்சொப் இல.1, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்.
ஜெயகிருஷ்ணா ஸ்ரோர்ஸ் இல.24, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
த போன் சொப் பிரதான வீதி, நெல்லியடி
பொதிகை-கம்பியூட்டர் கிராபிக்ஸ் இல.100, கண்டி வீதி, சாவகச்சேரி

இச்சலுகை இன்னும் சில தினங்களுக்கு மட்டுமே.
அரச விதிமுறை:- தாங்கள் உபயோகிக்கும் சிம் தங்களுடைய பெயரிலேயே பதிவுசெய்யப்பட வேண்டும். பிறரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட சிம் ஐ உபயோகிப்பது குற்றமாகும்.
DIALOG TELECOM எதிர்காலம் இன்றே.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org